COMPLEMENTARY COPY
UNIVERSITY LIBRARY 31 JUL 2012 PERIODICALS DIVISION

யாழ் மக்களின் வரலாறு, கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் யாழ் மண்ணின் இணையத்தளம்.
www.yarlmann.lk

YARL OSAI
# யாழ் ஓசை
ஓங்கி ஒலிக்கும் ஒப்பற்ற நாதம்
விலை 15/=  Regestered No. .../83/News/2012
ஓசை : 01 நாதம்: 67 வெள்ளிக்கிழமை 27.07.2012 பக்கங்கள்: 12

யாழ் மக்களின் வரலாறு, கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் யாழ் மண்ணின் இணையத்தளம்.
www.yarlmann.lk

உலகிலேயே இழுபடும் தோல்... பக்கம் 05



குடல்வளரி நோயும் சிகிச்சையும்... பக்கம் 09




காஷ்மீரில் சிறிய அளவில் நிலநடுக்கம் பக்கம் 05



விக்ரமுடன் இணையும் தீபிகா... பக்கம் 09



# மீள்குடியேறி நான்கு மாதங்களாகியும் சீரான குடிநீர் வசதிகள் இல்லை

## வலி. வடக்கு பிரதேச சபையின் சேவைகள் சீராக இல்லை என புகார்

(எம். நியூட்டன்)

வலி.வடக்கு வசாவிளான் மேற்குப் பகுதியில் கடந்த நான்கு மாதங்களாக மீள்குடியேறிய மக்களுக்கு வலி.வடக்குப் பிரதேச சபையினால் நீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. தமக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் திருப்திகரமானதாக இல்லையென வலி.வடக்கு பிரதேச சபையின் உபதவிசாளர் எஸ்.சஜீவனிடம் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நேற்று (08 ஆம் பக்கம் பார்க்க)



வலி.வடக்கு வசாவிளான் மேற்குப்பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகின்றனர். இங்கு சிறிய குடிசையில் பெண்ணொருவர் தனது சமையல் கடமையில் ஈடுபட்டிருப்தை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: எம்.நியூட்டன்)

## செங்கம்பளம் விரித்து அகதிகளை வரவேற்க முடியாது

### அரசாங்கம் தெரிவிப்பு

(அ.கனகராஜ்)

சட்டபூர்வமான முறையில் வெளிநாடுகளுக்குச் சென்று ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடுகளை செய்துவிட்டு நாடுதிரும்புவோர் எவ்வாறான முறைப்பாடுகளை செய்துள்ளனர் என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதுடன் அகதிகள் நாடு (08 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

### வவுனியா வேப்பங்குளத்தில் சம்பவம்

ஓமந்தை.

வவுனியா, வேப்பங்குளம், ஆறாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தளையசிங்கம் ராமேஸ்வரன் (வயது 28) என்ற 6 மாதக் குழந்தையொன்றின் தந்தையே தனது வீட்டில் இவ்வாறு தூக்கிட்டு மரணமடைந்துள்ளார். வியாபாரம் செய்து வந்த இவர் நேற்று இரவு தூக்கிட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பில் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியா ஹோட்டலில் சடலமாக மீட்கப்பட்டவர் தற்கொலை செய்ததாக மருத்துவச் சான்றிதழ்

ஓமந்தை,

வவுனியா ஹோட்டலில் சடலமாக நேற்று மீட்கப்பட்ட பெண் தற்கொலை செய்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)



## மன்னார் நீதிமன்ற விவகாரம் தொடர்பில் அமைச்சர் ரிஷாட்டை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. வழக்கொன்றின் தீர்ப்பு குறித்து மன்னார் நீதிவானுக்கு அழுத்தம் கொடுத்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் தாம் ஏன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணங்களை அன்றையதினம் முன் வைக்குமாறு (08 ஆம் பக்கம் பார்க்க)

### கடத்தல் குற்றச்சாட்டில் கைதான

## கூட்டமைப்பு வேட்பாளர் விளக்கமறியலில்

வடக்கு, கிழக்கு மக்களை சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கிழக்கு மாகாணசபையின் (08 ஆம் பக்கம் பார்க்க)

5 ஆம் ஆண்டு மாணவர்களே.!
ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை தொடக்கம் உங்கள் யாழ். ஓசையில் எதிர்வரும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள் தினமும் பிரசுரமாகும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகிறோம்.



### அதிபர் நியமனத்தில் இழுபறி

## பிள்ளைகளின் கல்வி பாதிப்பு

(ரொக்ஷன்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அதிபர் சர்ச்சையினாலும் நிர்வாகத்தலையீட்டினாலும் இப்பாடசாலை ஆசிரியர்கள் ஒழுங்கான முறையில் கற்பித்தல் செயற்பாடுகளில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கர்ப்பவதியாக்கிய பெண்ணை கொலை செய்ய மாமனார் முயற்சி

(ரொக்ஷன்)

மனநலம் குன்றிய 17 வயதுப் பெண்ணை கற்பழித்தமையால் 5 மாத கரு உண்டாகிய நிலையில், அப்பெண்ணை கிணற்றில் தள்ளி கொலை செய்ய முயற்சித்ததாக மாமனார் மீது தெல்லிப்பழை பொலிஸில் (08 ஆம் பக்கம் பார்க்க)

NINEWELLS HOSPITAL
TODLO

ART CONTEST & EXHIBITION
Painting, Drawing, Print making Photography and More!
for 2013 calendar
Theme: health care
art work must reflect health related to children or maternity

Age Group : Below 12 Year
Due Date : 10th of November 2012
Size : 12 X 14
Please indicate the name & contact details of the contestant on the back of the painting.

Drop Off: Art work could be posted or dropped off at Ninewells Care Mother & Baby Hospital (pvt)Ltd 55/1, Kirimandala Mawatha, Narahenpita, Colombo 5.

Art Exhibition
Date : 16th - 18th of November
Venue : Ninewells Hospitals, 55/1, Kirimandala Mawatha, Narahenpita, Colombo 05.








# நிமலரூபனின் பிரேத பரிசோதனை அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்

## – மக்கள் கண்காணிப்புக் குழு அறிக்கை

தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் மரணம் தொடர்பிலான பிரேத பரிசோதனை அறிக்கையை அரசு உடன் பகிரங்கப்படுத்த வேண்டுமென மக்கள் கண்காணிப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் சர்வதேச சமூகம் மனிதாபின அடிப்படையில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

நிமலரூபனின் மரணத்தில் புதைந்துள்ள மர்மங்களை மூடி மறைப்பதற்கு அரசு பல கோணங்களில் கருத்துகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது எனத் தெரிவித்த மக்கள் கண் காணிப்புக் குழுவின் தலைவரும், ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளருமான சிறிதுங்க ஜயசூரிய, நிமலரூபனின் மரணம் தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

நிமலரூபன் அரசின் கண்காணிப்பின் கீழ் இருந்து வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். எனவே, அவரின் மரணத்திற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசுதான் ஏற்க வேண்டும்.

சிறைச்சாலை அதிகாரிகளின் மிருகத்தனமான தாக்குதலுக்கிலக்காகி படுகாயமடைந்து, கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நிமலரூபன் உயிரிழந்தார்.

ஆனால், அவர் மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்தார் என அரசு கூறுகிறது.

இது மட்டுமின்றி, தமிழ் அரசியல் கைதி நிமல ரூபனின் மரணம் தொடர்பில் அரசு மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு வருகின்றது.

எனவே, நிமலரூபனின் பிரேத பரிசோதனை அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு இத் தருணத்தில் நாம் அரசை வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை, நிமலரூபன் இவ் உலகை விட்டுப் பிரிந்து சென்றதையடுத்து அவரின் பெற்றோர் அநாதரவாகியுள்ளனர். எனவே, நிமலனின் குடும்பத்துக்கு உதவுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். நிமலரூபனின் பெற்றோருக்குப் புதிய வீடொன்றை அமைத்துக் கொடுப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இதற்கு அனைத்து தமிழர்களும் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவரும், ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளருமான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

# முறையான செயல்முறைகளை பின்பற்ற வேண்டும்

## ஐ.நா.வுக்கு ஆலோசனை சொல்கிறார் இலங்கையின் புதிய தூதுவர்

இலங்கையின் நிலைமைகளை மதிப்பீடு செய்யும் போது, முறையான செயல்முறைகளை ஐ.நா.வும் ஐ.நா.வின் உறுப்பு நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று இலங்கை வலியுறுத்திக் கூறியுள்ளது.

ஜெனீவாவுக்கான இலங்கையின் புதிய வதிவிடப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றுள்ள ரவிநாத் ஆரியசிங்ஹ, தனது நியமன ஆவணத்தை ஜெனீவாவிலுள்ள ஐ.நா. பணியகப் பணிப்பாளர் நாயகம் காசிம் ஜோமார்ட் டோகாயேவிடம் கையளித்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

'ஐ.நா.வும், ஐ.நா.வின் உறுப்பு நாடுகளும் முறையான செயல்முறைகளை பின்பற்றுவதுடன் அதன் குறிக்கோள் அலகுகளினால் வழிப்படுத்தப்பட வேண்டும்.

வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட விடுதலைப் புலிகள் ஆதரவு சக்திகளும், சில புலம்பெயர் தமிழ்க்குழுக்களும், சுயநலத்துடன் செயற்படும் சிலரும், தமது குறுகிய நோக்கங்களுக்காக ஐ.நா.வைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க கூடாது என்றும் ரவிநாத் ஆரியசிங்ஹ தெரிவித்துள்ளார்.

# அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு

தெல்லிப்பழை,

இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். இன்றைய தினம் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலந்துரையாடல்

மயிலிட்டி மக்கள் மீள்குடியேற்றம் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (மல்லாகத்தில்) இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாக துரித நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் மயிலிட்டி மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகளில் பாரபட்சம் காட்டும் கிராம சேவையாளர்கள்

## உண்மைத் தகவல்களை மறைத்து ஊழல் செய்கின்றனர்

(எம். நியூட்டன்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சில கிராம அலுவலர்கள் பக்கச் சார்புடன் பாரபட்சமாக நடந்தும் கொள்கின்றனர். பாதிக்கப்படாதவர்களையும் பதிவுகளில் காட்டி நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர். நிர்வாகத்திறனற்ற இத்தகைய ஒருசில கிராம அலுவலர்களினால் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இத்தகைய கிராம சேவையாளர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி தற்போது மெல்லமெல்ல அழிவுகளிலிருந்து மீண்டு வருகின்றது. பல இலட்சம் மக்கள் உயிரிழந்தும் சொத்துகளை இழந்தும் இடப்பெயர்வுகளை சந்தித்தும் முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், மீள்குடியேறும் மக்கள் தமக்கான அன்றாட அத்தியாவசிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், அமைச்சர்கள், எம்.பி.க்களிடம் மக்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

மேலும் தமக்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இம் மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினர் மக்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவையாளர்களையே நாடுகின்றனர். ஆனால், ஒருசில கிராம அலுவலர்கள் தமக்கும் தமக்குரியவர்களுக்கும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முறையற்ற பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியமரும் மக்கள் தமக்கான வீடுகளைப் பெற்றுக் கொள்வதனாலோ அல்லது இதர உதவிகளைப் பெற்றுக் கொள்வதனாலோ தமது பகுதியில் சொந்தக் காணியில் இருக்க வேண்டும் என்பதே அனைத்து உதவி அமைப்புகளின் வேண்டுகோளாகவுள்ளது.

மீள்குடியமர்ந்த குடும்பங்கள் தமக்கான தங்குமிடத்தை சொந்தக் காணியில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அமைத்து அங்கேயே தங்கி வாழ்கின்றனர். இவ்வாறு தங்கி வாழுகின்ற மக்கள் தமது தேவைகள் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பாக கிராம அலுவலர்களைச் சந்திக்கச் செல்லும்போது பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கிராம அலுவலர்கள் தமக்கு ஏற்றவர்களுக்கு மட்டுமே உதவிகளைச் செய்து வருகின்றனர். ஏனையவர்கள் செல்லும்போது தேவையற்ற விதண்டாவாதப் பேச்சுபேசி மக்களை அலைக்கழித்து வருகின்றனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/150 கிராம அலுவலர் பிரிவில் 105 குடும்பங்களுக்கு மேல் குடியமர்ந்துள்ளபோதும் அங்குள்ள கிராம அலுவலரிடம் முழுமையான விபரமும் இல்லை. இங்கு மாதர் சங்கம் என்ற அமைப்பும் இல்லை. குறிப்பாக 3 வருடத்திற்கு முன்பு இயங்கிய மாதர் சங்கத்தின் பெயரை வைத்துக் கொண்டு மாதர் சங்கம் இயங்குவதாக பிரதேச செயலகத்திற்கும் அறிவித்தலை வழங்கியுள்ளனர்.

மாதர் சங்கத்தின் விதவைகள் விபரங்கள் என கணவன் உள்ளவர்களையும் விதவைகளாகப் பதிந்து உதவிகள் பெறப்பட்டுள்ளன. ஒருசில குடும்பங்கள் இரவில் குறித்த பிரதேசத்தில் தங்காதபோதும் அவர்கள் நிரந்தரமாக அங்கு தங்குவதாகக் காட்டி விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நிரந்தரமாக தங்குபவர்கள் சிலரது பெயர்கள் நீக்கிகப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிவாரண முத்திரைகளைக் கூட தமக்கு ஏற்றவர்களுக்கே வழங்குகின்ற ஓர் துர்ப்பாக்கிய நிலையை அப்பகுதியில் அவதானிக்க முடிகிறது. மேலும், கிராம சேவையாளர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தை ஏற்றுக் கொள்ளாது தமக்குப் பொருத்தமானவர்களை மட்டும் வைத்துக் கொண்டு கிராம அபிவிருத்தி வேலைகள் தடை செய்யப்படுகின்றன.

# பாதயாத்திரை சென்றவர் மாடு குத்தி மரணம்

மட்டக்களப்பில் இருந்து கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற குழுவில் ஒருவர் கொம்பு மாடு குத்தி உயிரிழந்துள்ளார்.

பாத யாத்திரை சென்ற குழுவில் இருவர் கதிர்காமம் வரஹன 20 ஆம் கிலோ மீற்றர் பகுதியில் திவுல் பழம் பறிக்க வனப்பகுதிக்குச் சென்றபோது ஒருவர் கொம்பு மாடு குத்தி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பளுகாமம்- போரதீவு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய தம்பிமுத்து மேகரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

# ஏழை நோயாளர்களுக்கு சேவை செய்வதில் விருப்பம் கொண்டவர் திருமதி நர்கிஸ் நல்லையா



திருமதி நர்கிஸ் நல்லையா, கடந்த ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார். இவர் குடும்பத்தில் இளையவர், தந்தை காலஞ்சென்ற ஜூலியஸ் குணரத்னத்தின் கண்ணுக்கினியவர். காலஞ்சென்ற தாயார் மற்றும் சகோதரர்களின் நேசத்துக்கு உரியவர்.

அரியம் நல்லையாவின் அன்பு மனைவியும் அர்ஜன், ராஜ் மற்றும் க்ளோ ஆகியோரின் பாசமிகு தாயாகவும் திகழ்ந்தவர். இறக்கும் வயதற்ற இவருக்கு விதி இறப்பைக் கட்டளையிட்டது. தன் கடமைகளை முடித்துக்கொண்டு உன்னதமாக எமக்கு விடைகொடுத்து உயிர் நீத்த அவரின் நினைவலைகள் எம் நெஞ்சில் நிலைத்திருக்கின்றன.

மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட, வேம்படி மகளிர் கல்லூரி தோற்றுவித்த மிகச்சிறந்த விளையாட்டு வீராங்கனையான இவருக்கு நம்பிக்கையும் உள வலிமையும் பாரிய சொத்துகளாகும்.

ஏழை பணக்காரர் என்ற வேறுபாடற்ற இரக்க குணம் கொண்ட மருத்துவ அதிகாரியான அரியம் அவர்களுடன் இணைந்து கரவனெல்லையில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். எண்ணில்லா ஏழை நோயாளர்கள் நல்லையா அவர்களால் கட்டணமின்றி சிகிச்சை பெற்றார்கள். அவரது நம்பிக்கையின் நடுங்காத்தன்மை கண்டு மெச்சிக்கின்றோம்.

1983ஆம் ஆண்டு வீட்டை இழந்து ஏதுமற்ற நிலையில் குடும்பத்துடன் இலங்கையை விட்டு அவுஸ்திரேலியா சென்றார். அவுஸ்திரேலிய வாழ்க்கை நம்பிக்கையூட்டவில்லை. கணவர் நோயாளியானதும் இறுதிவரை அவரை பராமரிக்க நேர்ந்தது. பயணித்த அந்த துயரகரமான பாதையிலும் கூட மகன்மார் அர்ஜன் மற்றும் ராஜ் ஆகியோருக்கு உறுதுணையாக இருந்தார். அவர்களே அவரது பெருமையும் மகிழ்ச்சியும்!

பிள்ளைகளது பட்டப்படிப்பிற்கு நடுவே தனது அறுவை சிகிச்சைகளை புன்முறுவலுடன் எதிர்கொண்டார். தொல்லைகள் தொடர்ந்துவரும் என்பது போல் வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டில் மீதமிருந்தவற்றையும் 2011 ஆம் ஆண்டில் வெள்ளம் விட்டு வைக்கவில்லை, எவ்வளவோ துயர்களுக்கு மத்தியிலும் அவரது வாழ்க்கை ஓர் உண்மை கிறிஸ்தவருடைய வாழ்க்கையாக அமைந்தது.

உயிருள்ள தேவனின் பிரமாணிக்கமுள்ள ஊழியப் பெண்ணாக வாழ்ந்து இயேசு கிறிஸ்துவின் கரங்களில் தன்னை ஒப்படைத்துக்கொண்டார். சர் ஈல்டன் ஜோனின் 'வீசும் காற்றில் மெழுகுவர்த்தி' என்னும் வரிகளை மீட்டிப்பார்க்க விரும்புகிறோம். 'உமது மெழுகுவர்த்தி நீண்ட நாட்களின் முன் எரிந்து தீர்ந்தது. உம் கதை அழிவதற்கில்லை!'

''இறைவன் என் ஒளியும் இரட்சிப்புமாய் உள்ளார்''

திருமதி. ஆர் ஆர். நல்லையா

# செக்ஸ் புகாரில் சிக்கியவர்தான் மதுரைக்கு ஆதீனமாக வரவேண்டுமா?

'இடத்தைக் கொடுத்தால், மடத்தைப் பிடிப்பார்கள்' என்ற பழமொழிக்கு புதிய உதாரணமாக ஆகிவிட்டார் நித்தியானந்தா!

ஏப்ரல் 11ஆம் திகதி, நடிகை ரஞ்சிதா சகிதம் மதுரை ஆதீன மடத்துக்கு விசிட் அடித்துவிட்டுப் போனார் நித்தியானந்தா. அப்போதே பலரும் சங்கடப்பட்டார்கள். 'புனிதமான மதுரை ஆதீனத்துக்குள், சர்ச்சையில் சிக்கிய ஒருவர் நடிகையுடன் வரலாமா?' என்று கேள்வி எழுப்பினார்கள். அன்று விருந்தாளியாக வந்தவரே... இன்று மதுரை ஆதீனமாக மாறி விட்டார்.



சம்பந்தம் இல்லாவிட்டாலும் தானே போய் சர்ச்சையில் சிக்கிக்கொள்பவர் மதுரை ஆதீனம். கடந்த 2004ஆம் ஆண்டு தன் அத்தை மகளின் மகனான சுவாமிநாதனை ஆதீனத்தின் இளவரசராக கோலாகல விழா நடத்திப் பட்டம் சூட்டினார். மிகக்குறுகிய காலத்துக்குள், 'ஆதீன விதிகளுக்கு விரோதமாகச் செயற்படுவதாக' குற்றச்சாட்டுகளை அடுக்கி, சுவாமிநாதனை மடத்தை விட்டு விலக்கியும் வைத்தார். இந்த வில்லங்கமே இன்னமும் முழுமையாகத் தீராத நிலையில், நித்தியானந்தாவை அவசரகதியில் அடுத்த குருமகா சந்நிதானமாகத் தேர்வு செய்து மீண்டும் சர்ச்சையில் சிக்கி இருக்கிறார் ஆதீனம்.

தமிழ்நாடு சைவ வேளாளர் சங்கத்தின் தலைவர் கணபதி சந்தானத்திடம் இது குறித்துப் பேசினோம். ''திருஞானசம்பந்தரால் உருவாக்கப்பட்டது மதுரை ஆதீன மடம். சிறந்த முறையில் சைவத் தொண்டாற்றி மக்களைப் பண்புள்ள மனிதர்களாக உருவாக்கிய ஒரு பாரம்பரியமான மடத்துக்கு, செக்ஸ் வழக்கில் சிறை சென்று வந்த ஒருவரை, இன்னும் வழக்கில் இருந்து விடுபடாத ஒருவரை, அடுத்த மடாதிபதியாக ஆதீனகர்த்தர் நியமித்து இருப்பது கண்டிக்கத்தக்கது. வருந்தத்தக்கது. சைவப் பாரம்பரியத்தில் வந்தவர்களுக்கும் ஆன்மிகத்துக்கு சிறந்த தொண்டாற்றி பல்வேறு அறிஞர்களை உருவாக்கிய சைவ சமயத்தாருக்கும் இது மாபெரும் இழுக்கு. இந்தச் செயலை சைவப் பாரம்பரியத்தில் வந்த எவரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். எனவே, ஆதீனகர்த்தர் அவர்கள் தனது அறிவிப்பை உடனடியாக வாபஸ் பெற்று, சைவ சமயத்துக்கு உண்மையாகத் தொண்டாற்றும் ஒருவரை நியமிக்க வேண்டும். சைவ வேளாளர் பிரிவில் உள்ள 13 சாதிக்காரர்கள்தான் மதுரை ஆதீனமாக வர முடியும். ஆனால், மரபுகளை மீறி, முதலியார் சாதியைச் சேர்ந்த நித்யானந்தாவை அடுத்த வாரிசாக அறிவித்திருக்கிறார் ஆதீனம். ஆதீனத்தின் செயல்பாடுகள் எல்லாமே முரண்பாடாகவே இருக்கிறது.

ஜூ.வி. யில் வந்த கட்டுரைகளின் தொகுப்பு

தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனங்கள், கல்லூரிகளைத் தொடங்கித் தமிழை வளர்க்கிறார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் பழைய தமிழ் நூல்களை எல்லாம் புதுப்பித்து வெளியிட்டு சேவை செய்கிறார்கள். மதுரை ஆதீனம் இதுவரை தமிழுக்காக என்ன செய்திருக்கிறார்? நித்தியானந்தா ஒரு கோடி கொடுத்தால், மடத்தை விக்கிறதுக்கு இது என்ன மாநகராட்சி டெண்டரா? அப்படியானால் நாளைக்கு இன்னொருவர் இரண்டு கோடி கொடுத்தால், அவருக்குப் பட்டம் சூட்டுவாரா? ஆதீனம் தன் இஷ்டத்துக்குச் செயற்படுவதற்கு மடம் ஒண்ணும் அவங்க பாட்டன் சொத்து இல்லை. நித்யானந்தா சைவ வேளாளரே அல்ல. அவருக்குப் பட்டம் சூட்டியது செல்லாது என்று கோர்ட்டுக்குப் போகப் போகிறோம். அரசாங்கமும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும்'' என்றார்.

பெங்களூரில் இருந்த மதுரை ஆதீனத்தைத் தொடர்புகொண்டு பேசினோம். ''எங்களைப் போல அனைத்துத் திறமைகளும் தகுதிகளும் கொண்ட ஒரு துணிச்சலான மாவீரனைத் தேடிக் கொண்டு இருந்தோம். பார்வதி தேவியும் சிவபெருமானும் நித்தியானந்தாவை அடையாளங் காட்டினார்கள். அவர்களது உத்தரவை ஸ்டே பண்ணி வைக்கக்கூடாது. அதனால், அவசர அவசரமாக நித்தியானந்தாவுக்குப் பட்டம் சூட்டிவிட்டோம்'' என்றார்.

''மடம் மதுரையில் இருக்க, மகுடத்தை பெங்களூரில் வைத்து சூட்டி இருக்கிறீர்களே?''

''நித்தியானந்தாவுக்குப் பட்டம் சூட்டும் விழாவில் பிடதியில் உள்ள அவரது சிஷ்யர்களும் வெளிநாடுகளில் இருப்பவர்களும் கலந்துக்கப் பிரியப்பட்டாங்க. அவ்வளவு பேரையும் மதுரைக்கு கூட்டிட்டுப்போறது முடியாதுங்கிறதால நாங்களே இங்கு வந்து விட்டோம்.''

''சைவ வேளாளர் அமர வேண்டிய ஆதீனகர்த்தரின் இருக்கையில் முதலியாரான நித்தியானந்தாவை வைத்து உள்ளீர்களே?''

''அதெல்லாம் இல்லை. நித்தியானந்தாவும் சைவ வேளாளர்தான். மதுரை ஆதீன கர்த்தராக அமர்வதற்கான அனைத்துத் தகுதிகளும் அவருக்கு இருக்கு. இப்படிப்பட்ட ஆற்றல்மிக்க ஒரு தம்பிரானைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெற்றமைக்காக, நாங்கள் இறைவனுக்கு நன்றி சொல்கிறோம். இதை நாங்கள் செய்த தவத்தின் புண்ணியமாகக்கருதுகிறோம் நித்தியானந்தாவின் வருகை ஆதீனத்துக்குப் பெருமை.''

(திங்கள் தொடரும்)

## யாழ் ஓசை இன்றைய பலன் 27.07.2012

### நந்தன வருடம் ஆடி 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| நட்சத்திரம் | : விசாகம் |
| திதி | : பூர்வ நவமி |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 வரை |
| சுபநேரம் | : 6.02 - 7.32 வரை |

ஸ்ரீ வரலட்சுமி விரதம், சுமங்கலி பூஜை நாள்

| | |
|---|---|
| மேடம் | : நன்மை |
| இடபம் | : சஞ்சலம் |
| மிதுனம் | : அலைச்சல் |
| கடகம் | : விரயம் |
| சிம்மம் | : வெற்றி |
| கன்னி | : நன்மை |
| துலாம் | : மேன்மை |
| விருச்சிகம் | : பிரயாணம் |
| தனுசு | : பணவரவு |
| மகரம் | : மகிழ்ச்சி |
| கும்பம் | : மருத்துவம் |
| மீனம் | : குதாகலம் |

- ராம்தேவா குருக்கள்

# Maliban Quiz 04

Powered By Maliban Gold Marie



## இவ்வார வரலாற்றுப் பயணம் :

# யாழ்ப்பாணக் கோட்டை

Maliban Full of goodness

யாழ்ப்பாணத்தின் மையமாக விளங்குவது யாழ்ப்பாணக் கோட்டையாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் கரையோரத்தில் தன் கம்பீரமான வடிவத்தை இழந்து சிதிலமான நிலையில் இன்றும் கோட்டை காணப்படுகின்றது. யாழ்ப்பாணக்குடா நாட்டின் தெற்கே பண்ணைக் கடற் கரையோரத்தில் கம்பீரமாகக் கோட்டை அமைந்திருந்தது. இக்கரையோரத்தில் இன்று காணப்படுகின்ற கோட்டை ஒல்லாந்தரால் மீளமைக்கப்பட்ட கோட்டையாகும். யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட கட்டமைப்புகளில் மிக அற்புதமானதாகும். அதுமாத்திரமல்லாமல் கீழைத் தேசத்திலுள்ள கோட்டைகள் யாவற்றிலும் மிகப் பலமானதும் பாதுகாப்பானதுமான கோட்டை என அனைத்துக் கட்டிடக்கலை விற்பன்னர்களாலும் விதந்துரைக்கப்பட்டதாகும். முதலில் சிறிய பண்டகசாலையாக இக்கோட்டை இருந்தது. பின்னர் போர்த்துக்கேயர் அப்பண்டகசாலையை நாற்சதுரக் கோட்டையாக்கினர். ஒல்லாந்தர் இக்கோட்டையைப் புனரமைத்தனர். முதலில் ஐங்கோண வடிவில் உள்கோட்டையின் வடிவம் அமைக்கப்பட்டது. இதனை 1680 இல் கட்டி முடித்தனர். கோட்டையின் சுற்றுப்புறக் கட்டமைப்பு 1792 இல் நிறைவுற்றது. யாழ்ப்பாணக்கோட்டை ஐந்து கொத்தளங்களைக் கொண்டுள்ளது. கடற்புறமாக இரண்டு கொத்தளங்களையும் நிலப்பக்கமாக மூன்றையும் கொண்டுள்ளது. உள்கோட்டையின் சுற்றளவு 6300 அடிகளாகும். கொத்தளத்தின் ஒரு பக்கத்தளம் 340 அடிகளாகும். யாழ்ப்பாணக் கோட்டை மதிலின் உச்சி 20 அடி அகலமானது. அடித்தளத்தில் 40 அடி அகலமானது. கோட்டைச் சுவர் 30 அடி உயரமானது. கோட்டையைச் சுற்றி 132 அடி அகலமான அகழியுள்ளது. அகழிச் சுவரோடு சின்னக்கோட்டைகள் அமைந்துள்ளன. இவை முருகைக்கற்களினால் மூடப்பட்ட கூரைகளைக் கொண்டுள்ளன. ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட கோட்டைகள் யாவும் முருகைக் கற்களினால் அமைக்கப்பட்டவை. இக்கோட்டைகள் கடற்கரையோரங்களில் அல்லது பாதைக் கடவைகளில் அமைந்திருந்தன. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் கவனர் பங்களா, ராணி மாளிகை, சிறைச்சாலை என்பன கட்டப்பட்டன. பிற்காலத்தில் ராணி மாளிகையில் வைத்து கைதிகள் விசாரிக்கப்பட்டார்களாம். கோட்டை இரண்டு வாயில்களைக் கொண்டிருந்தது. ஒன்று கடற்பாதை மற்றையது நிலப்பாதை. கடற்பாதை கடலோரமாக அமைந்திருந்தது. நில வழி தொங்கு பாலத்தினால் இணைக்கப்பட்ட பிரதான வாயிற்புறம் நிலப்பாதையாகும். கோட்டைக்குள் தென் கிழக்குப் பகுதியில் ஒரு சதுரங்கத் தேவாலயம் அமைந்திருந்தது. இன்று இக்கட்டிடங்கள் எதனையும் காணமுடியாது. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற சதியொன்று நடந்தது. நல்லூர் முதலியாராகவிருந்த பூதத்தம்பி என்பவன் இதில் பங்குபற்றினான் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் யாழ்ப்பாண நிர்வாக மையமாக யாழ் கோட்டை விளங்கியதால் அதை இராசவாசல் என சிறப்பாக அழைத்தார்கள். ஒல்லாந்தரின் பின்னர் கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது. அவர்கள் காலத்தில் இலங்கை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டார்கள். வட மாகாண அரசாங்க அதிபர் நிர்வாகத்தை கோட்டையிலிருந்து மாற்றினார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் சுப்ரீம்கோர்ட் நீதிபதி கோட்டை ராணி மாளிகையில் தங்கினார். கோட்டையின் அதுக்கென ஒதுக்கப்பட்ட தூக்குமேடையில் அலுகோசுகள் எனப்பட்டோர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டோரைத் தூக்கில் மாட்டினர்.

**கேள்வி : யாழ்ப்பாணக் கோட்டையருகே அமைந்துள்ள விளையாட்டரங்கின் பெயர் என்ன?**



இந்த போட்டியில் பங்குகொள்ள மலிபன் கோல்ட் மாரி பிஸ்கட் பக்கட் உறைகள் இரண்டோடு கீழ்காணும் கூப்பனை நிரப்பி பின்வரும் விலாசத்திற்கு ஆகஸ்ட் 02. 2012 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். **"Maliban Quiz" P.O.Box. 160, Colombo**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களிலிருந்து இரண்டு அதிஷ்டசாலிகளை குலுக்கள் முறையில் தெரிவு செய்து வெற்றியாளர்களுக்கு தலா 1500/- பெறுமதியான மலிபன் பிஸ்கட் உற்பத்திகள் அனுப்பி வைக்கப்படும்.

Maliban Quiz 03 இல கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடை யமுனா ஏரி

அதிஷ்டசாலி வெற்றியாளர்கள்

1. ரஞ்சன் கவிமதி
   சபாபதி பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு,
   சுன்னாகம்
2. தெ. பிறேமினி
   லஷ்மி சினிமா ஒழுங்கை,
   நெல்லியடி, கரவெட்டி

**இவ்வார வரலாற்று பயணம்**

Maliban Quiz 04

விடை : ........................................

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

தொலைபேசி இல : ........................................

தே.அ.அட்டை இல : ........................................

Maliban Full of goodness | யாழ் ஓசை

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் மற்றும் மலிபன் நிறுவன உத்தியோகத்தர்கள், மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.



YARL OSAI
யாழ் ஓசை
வெள்ளிக்கிழமை 27.07.2012
2012 ஜூலை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-7322100, Fax: 021- 7322101
E-mail-jaffna@virakesari.lk

## இன்றைய சிந்தனை

எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்

- இந்தியா

# யாழ்ப்பாணத்தில் தொடரும் கொள்ளை; மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம்:

யாழ்ப்பாணத்தில் களவுகள், கொள்ளைகள் போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றன. இது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ள போதிலும் அது குறித்து பாதுகாப்புத் தரப்பு கவனத்திற்கொள்வதாகத் தெரியவில்லை. மறுபுறம், இது பாதுகாப்புப் பிரிவினருக்கு பெரும் சவாலாகவும் அமைந்துள்ளது. இரவுவேளைகளில் வீடுகள், ஆலயங்களுக்குள் புகுந்து கொள்ளையிடும் கோஷ்டியினர் மிகவும் இலகுவாக தப்பித்தும் கொள்கின்றனர். இதனால் மக்கள் சதா அச்சத்துக்கு மத்தியிலேயே வாழவேண்டிய சூழ்நிலை இருந்துவருகின்றது.

கடந்த காலங்களில் வீட்டுக் கதவை பூட்டாமல் வெளியில் சென்றால் கூட அனைத்துப் பொருட்களும் வைத்த இடத்திலேயே கிடக்கும் என பெருமை பேசிய வட பகுதி மக்களுக்கு இன்று வீட்டிலேயே நிம்மதியாக இருக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது என்பதே யதார்த்தமாகும். அந்த அளவுக்கு கொள்ளையர்களின் அச்சுறுத்தல்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இரவுவேளைகளில் கோஷ்டியாக வரும் இவர்கள் ஆயுதங்கள் மற்றும் கத்தி, வாள் என்பவற்றைக் காட்டி அச்சுறுத்தியே கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். இருந்தபோதிலும், இவர்களைப் பிடிக்க முடியாதிருப்பது பெரும் சவாலாகவே வடபகுதி மக்களுக்கு இருந்துவருகின்றது. இந்தக் கொள்ளையர்கள் வீடுகளை மாத்திரமின்றி ஆலயங்களைக் கூட விட்டு வைத்தது கிடையாது. ஒருபுறம் ஆலயங்களுக்கு வரும் பக்தர்களிடம் நகைகள், சங்கிலிகள் என்பவற்றை கொள்ளையடிக்கும் இவர்கள், மறுபுறம் விக்கிரகங்களையும் திருடிச் செல்கின்றனர்.

நல்லூர் உற்சவ காலம் ஆரம்பித்துள்ள இன்றைய சூழலில் முதல் நாளே நான்கு பவுண் தங்கச் சங்கிலி ஒன்று அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. பொதுவாக நல்லூர் உற்சவ காலங்களில் இதற்கெனவே திருடர்கள் தயாராக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த நல்லூர் உற்சவத்தின்போது இவ்வாறு நகைகளை அறுத்துச் சென்ற சம்பவத்தில் பிடிபட்ட பலர் தென்னிலங்கையிலிருந்து விசேடமாக இதற்கென வந்தவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, வலிகாமம் தெற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட குப்பிளான் வடக்கு, கடற்கரை விநாயகர் ஆலயத்தில் கொள்ளையிடச் சென்ற நால்வரில் ஒருவரை அப்பகுதி மக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கொள்ளையர்களின் தாக்குதலில் பொதுமக்கள் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. குப்பிளான் வடக்கு, கடற்கரை கற்பக விநாயகர் ஆலய உற்சவகாலத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நால்வர் கொண்ட கொள்ளையர் குழுவினர் விக்கிரகங்களிலிருந்த தங்க நகைகளை கொள்ளையிட முயற்சித்துள்ளனர். ஆலயத்தினுள் கொள்ளையர்கள் உள்நுழைந்ததை அவதானித்த பொதுமக்கள் அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றுள்ளனர். இதன்பொழுது கொள்ளையர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது அங்கு திரண்ட மக்கள் கொள்ளையர் ஒருவரை மடக்கிப் பிடித்து கட்டிவைத்துள்ளனர். எனினும் மூவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் குறித்த நபர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் விழிப்பாக இருந்ததன் காரணமாக கொள்ளை முயற்சி தடுக்கப்பட்டதுடன் கொள்ளையர்களில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். அதேவேளை, பொதுமக்கள் இருவர் தாக்குதலுக்கு இலக்காக நேர்ந்துள்ளது.

வடக்கில் இவ்வாறு இரவு நேரங்களில் தொடரும் கொள்ளைச் சம்பவங்களை தடுத்து நிறுத்த காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வடபகுதி ஆலயங்களில் கொள்ளையடிக்கப்பட்ட விக்கிரகங்கள், மற்றும் புராதனப் பொருட்கள் என்பன தென்பகுதியில் பழம் பொருட்கள் விற்பனைக் கடைகளிலும், ஹோட்டல்களிலும், வைக்கப்பட்டிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. மிகவும் அரியதும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியதுமான கலை அம்சம் பொருந்திய பாரம்பரிய பொருட்கள் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டு, கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய கொள்ளைகள் மிகவும் பாரதூரமானவையும், தமிழரின் கலாசாரத்தை இல்லாதொழிக்கச் செய்யக் கூடியவையாகும். அந்த வகையில் ஆலயங்களில் இவற்றை பேணிப்பாதுகாக்க சம்பந்தப்பட்ட தர்மகர்த்தாக்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று, பொலிஸாரும் தங்கள் பாதுகாப்புச் சேவையை விஸ்தரித்து கொள்ளைச் சம்பவங்களை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். இன்றேல் அது பாதுகாப்புத் தரப்பினருக்கு மிகுந்த அபகீர்த்தியை ஏற்படுத்துவதுடன் பாதுகாப்புச் சேவையில் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை உருவாக்குவதாக அமையும் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

# நல்லூர் இராசதானி பற்றி அறிந்து கொள்ள உதவும் சரித்திர நூல்கள்...

யாழ்ப்பாண வரலாறு பற்றியும் நல்லூர் இராசதானி பற்றியும் அறிந்து கொள்ள உதவும் பழைய சரித்திர நூல்களாக யாழ்ப்பாண வைபவ மாலை, கைலாயமலை, பரராசசேகரன் உலா, வையாபாடல், இராசமுறை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் சில நூல்கள் தற்போது வழக்கில் இல்லை என்பது வருத்தம் தரும் செய்தியாகும்.

**கைலாயமாலை-**

கைலாய மாலை என்பது யாழ்ப்பாண வரலாற்று ஆய்வாளர்கள் முதல் நூலாகக் கொள்ளும் நூல்களில் ஒன்றாகும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் யாழ்ப்பாண வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலையை எழுதிய மயில் வாகனப் புலவர் தான் பயன்படுத்திய முதல் நூல்களில் ஒன்றாக கைலாய மாலையையும் குறிப்பிட்டுள்ளார். இது யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் உறையூரைச் சேர்ந்த செந்தியப்பன் என்பவருடைய மகனான முத்துராசக் கவிராசர் என்பவரால் பாடப்பட்டது.

நல்லூர் கைலாசநாதர் கோயிலில் எழுந்தருளியுள்ள கைலாசநாதர் பெருமான்மேல் பாடப்பட்டதாக தோன்றினும் யாழ்ப்பாண அரசன் செகராச சேகரனின் புகழ் பாடுவதற்கான நூலே இதுவென்று கருதப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திற்கு முன்எழுதப்பட்டு இன்றும் கிடைக்கக்கூடிய மிகச் சில நூல்களில் இதுவும் ஒன்றாகும்.இது ஆறுமுக நாவலரின் தமையனாரின் புத்திரர் த. கைலாசபிள்ளையவர்களால் அச்சிடப்பட்டது.



**யாழ்ப்பாண வைபவமாலை-**

யாழ்ப்பாண வைபவ மாலை என்பது யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூற என எழுந்த ஒரு நூலாகும். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் என்பரால் கி.பி. 1736 ஆம் ஆண்டளவில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அக்காலத்தில் இருந்த ஒல்லாந்த அதிகாரி ஒருவர் என நம்பப்படும் மேக்கறூன் என்பரின் வேண்டுகோளுக்கிணங்க இது எழுதப்பட்டதாக இந்நூலில் உள்ள சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றினால் அறியப்படுகிறது.

**ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் யாழ்ப்பாண வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலையை எழுதிய மயில் வாகனப் புலவர் தான் பயன்படுத்திய முதல் நூல்களில் ஒன்றாக கைலாய மாலையையும் குறிப்பிட்டுள்ளார்.**

கைலாயமாலை, வையாபாடல் பரராசசேகரன் உலா மற்றும் ராசமுறை போன்ற நூல்களை முதல் நூல்களாகக் கொண்டே யாழ்ப்பாண வைபவ மாலையை இயற்றினார் என்று மேற்படி செய்யுளில் புலவர் எடுத்துக்கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் கால வரலாறு பற்றி கூடியளவு தகவல்களைக் கொண்டுள்ள தற்போது கிடைக்கக் கூடிய நூல் இதுவே ஆகும். எனினும், மேற்படி காலப்பகுதியின் இறுதியின் பின் 150 - 200 ஆண்டுகள் வரை கழிந்த பின்னரே இந்நூல் எழுதப்பட்ட காரணத்தினால் பல்வேறு நிகழ்வுகளின் காலங்கள் தொடர்பிலும் மேலும் பல விடயங்களிலும் பிழைகளும் குழப்பங்களும் நேர்ந்துள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனினும் யாழ்ப்பாண வரலாறு தொடர்பில் இந்நூலின் பெறுமதியை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

இந்நூல் ஆரம்பத்தில் இராமாயணத்தில் இருந்து இராம இராவண யுத்தத்தின் பின் ஏற்பட்ட விபீஷணன் ஆட்சியைத் தொட்டு பின் மகாவம்சத்தில் இருந்து வட இந்தியாவில் இருந்து வந்த விஜயராஜனின் கதையையும் அவன் பின் அரியணையேறிய அவன் தம்பியின் மகனாகிய பண்டுவாசனதும் கதை கூறி பின் அவன் வம்சத்தில் வந்த ஒருவனிடமிருந்து தென்னிந்தியப் பாணன் ஒருவன் பரிசாகப் பெற்ற மணற்றிடர் என்ற இடம் யாழ்ப்பாணமான கதை கூறி யாழ்ப்பாணத்தின் வரலாற்றைத் தொடங்குகின்றது.

இலங்கையின் மேற்குக் கரையில் உள்ள திருக்கேதீஸ்வரத்தின் புனரமைப்பு, கிழக்குக் கரையில் உள்ள திருக்கோணேஸ்வரம், தெற்கில் உள்ள சந்திரசேகரீச்சரம் மற்றும் வட கரையில் உள்ள திருத்தம்பலேஸ்வரம் என்பவற்றை விஜயராஜனின் திருப்பணிகளாக இந்நூல் கூறுகிறது. பின்னர் யாழ்பாடியின் வரவுக்கு முன்னரே வன்னியர்களின் குடியேற்றம் பற்றியும் பேசப்படுகிறது.

யாழ்பாடிக்குப் பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் இருந்து கூழங்கைச் சக்கரவர்த்தி அழைத்துவரப்பட்டமை, நல்லூர் ராஜராணியின் தோற்றம், யாழ்ப்பாணத்தில் மக்களின் குடியேற்றம் என்பவற்றை விபரிக்கும் இந்நூல் தொடர்ந்து இந்நாட்டை ஆண்ட மன்னர்கள் பற்றியும் அவர்கள் காலத்தில் நடந்த முக்கிய சில சம்பவங்கள் பற்றியும் சுருக்கமாக விபரம் தருகிறது. போர்த்துக்கீசரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைய முன் நடந்த சம்பவங்களிலும், காலப்பகுதிகளிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. போர்த்துக்கீசர் ஆட்சி பற்றியும் பின்னர் அவர்களின் வீழ்ச்சி பற்றியும் கூறும் இந்நூல் ஒல்லாந்தரின் ஆட்சிபற்றியும் ஓரளவு கூறி நிறைவு பெறுகிறது.

ஒல்லாந்தர் ஆட்சியின்போது அவ்வரசின் அதிகாரி ஒருவரின் வேண்டுகோளின் பேரில் எழுதப்பட்ட இந்நூலில் காணப்படும் ஒல்லாந்தர் ஆட்சி பற்றிய சில கடுமையான விமர்சனங்களும் பிரித்தானிய ஆட்சி பற்றி வருகின்ற பகுதிகளும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

**வையாபாடல்-**

வையாபாடல் என்பது யாழ்ப்பாண வரலாற்றை ஆராய முற்படுவோருக்கான மூல நூல்களில் ஒன்றாகும். இதன் காப்புச் செய்யுளிலும் தொடர்ந்து வரும் பல இடங்களிலும் இலங்கையின் வரலாற்றைக் கூறுவதே குறிக்கோளாகக்காணினும் இது வட இலங்கையின் வரலாறு பற்றியே கூறுகிறது.

18ஆம் நூற்றாண்டின் மயில்வாகனப்புலவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலுக்கு முதல் நூலாக அமைந்த இதுவும் ஒன்றாகும். இந்நூலானது 104 செய்யுள்களினாலானது.

இந்நூலின் ஆரம்பத்தில் அதனை ஆக்கியோன் பற்றி கூறும் பாடலிலே 'ததீசிமா முனி தன் கோத்திரத் திலங்கு வையாவென விசைக்கு நாதனேசு என்று வருவதனால் இதன் ஆசிரியர் பெயர் வையாபுரி ஐயர் ஆவார் என அறியமுடிகிறது. கி.பி. 15ஆம் நூற்றாண்டளவில் நூல் எழுதப்பட்டதாகும்.

இந்நூல் கி.பி. 1440ஆம் ஆண்டு பட்டத்திற்கு வந்த கனகசூரியசிங்கை ஆரியனுடைய இரண்டாவது புதல்வனாகிய 7ஆம் செகராசசேகரன் யாழ்ப்பாண அரசனாயிருந்த காலத்துடன் நிறைவெய்துகிறது. பின்னர் ஆட்சியைக் கைப்பற்றிய சங்கிலியன் ஆட்சி பற்றி எதுவும் குறிப்பிடப்படாமையால் இந்நூல் சங்கிலியன் காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டதெனக் கொண்டு இதன் காலம் 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடையில் இருக்கக் கூடும் என 1980 ஆம் ஆண்டில் கொழும்பு தமிழ்ச்சங்கம் வெளியிட்ட வையாபாடல் நூலின் பதிப்பாசிரியரான க.செ.நடராசா அவர்கள் கணித்துக் கூறியுள்ளார்.

**பரராசசேகரன் உலா-**

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றைக் கூறும் பழையமையான நூல்களுள் பரராசசேகரன் உலாவும் ஒன்றாகும். இது ஒரு பழைய பத்திய ரூபமான நூல். இந்நூலை இயற்றியவர் யார் என்பது உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை. இதனை மனப்புலி முதலியார் இயற்றினார் என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்நூல் பற்றிய ஒரு சில குறிப்புகளே கிடைத்துள்ளன தவிர நூல் முழுமையாக அகப்படவில்லை.

**இராசமுறை-**

இராசகாரிய முறை என்ற நூல் இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றி ஆட்சி நடத்திய காலத்திற்கு சிறிது முன்னதாக எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்நூலை இயற்றியவர் யார் என்பது தெரியவில்லை. இந்நூல் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளனவே தவிர, இந்நூலும் அகப்படவில்லை.

**மேற்குறிப்பிட்ட நூல்கள் பற்றிய பழைய செய்யுள் ஒன்று வருமாறு-**

உரராசர் தொழுகழன் மேக்கொறூ உனென்றோது
முதலந்தேசு மன்னனுரைத் தமிழாற்கேட்க
வரராசகையாலாய மாலை தொன்னூல்
வரம்புகண்ட கவிஞர்பிரான் வையாபாடல்
பரராசகோன்றன் னுலாவுங் காலப்
படிவழுவா துற்றன சம்வங்க வட்டுந்
திரராசமுறைகளுந் தேர்ந்தி யாழ்ப்பாணத்தின்
செய்தி மயில்வாகனவேற் செப்பினானே

**நல்லூர் இராசதானி பற்றி அறிந்து கொள்ள உதவும் தற்கால நூல்கள்**

1. யாழ்ப்பாண சரித்திரம் - எஸ்.ஜோன் - யாழ்ப்பாணம் -1882
2. யாழ்ப்பாண வைபவ விமர்சனம்- சுவாமி ஞானப்பிரகாசர் அச்சுவேலி-1928
3. யாழ்ப்பாணச்சரித்திரம் - முதலியார் செ.இராசநாயகம் - யாழ்ப்பாணம்-1933
4. யாழ்ப்பாணச்சரித்திரம் - ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை -யாழ்ப்பாணம்-1933
5. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் - கா.இந்திரபாலா - யாழ்.தொல்பொருளியற்கழகம், கண்டி - 1972
6. நல்லூர் கந்தசுவாமிக் கோவில் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சென்னை -1875
7. யாழ்ப்பாணச்சரித்திரம் -ஆங்கிலேயர் காலம் -செ. இராசநாயக முதலியார் - யாழ்ப்பாணம் -1935

**இலங்கையின் மேற்குக் கரையில் உள்ள திருக்கேதீஸ்வரத்தின் புனரமைப்பு, கிழக்குக் கரையில் உள்ள திருக்கோணேஸ்வரம், தெற்கில் உள்ள சந்திரசேகரீச்சரம் மற்றும் வட கரையில் உள்ள திருத்தம்பலேஸ்வரம் என்பவற்றை விஜயராஜவின் திருப்பணிகளாக இந்நூல் கூறுகிறது.**

8. யாழ்ப்பாண அரச பரம்பரை - கலாநிதி க.குணராசா - கொழும்பு- 2000
9. நல்லூர் கந்தசுவாமி - குலசபாநாதன் - நல்லூர் - 1971
10. நல்லை நகர் நூல் - கலாநிதி.க.குணராசா - யாழ்ப்பாணம் -1987
11. ஈழத்து வரலாற்று நூல்கள் - பேராசிரியர் - சி.பத்மநாதன் - பேராதனை - 1970
12. நல்லூர் இராசதானி நகர அமைப்பு - வ.ந.கிரிதரன் - சென்னை - 1999
13. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - பேராசிரியர்.சி.க. சிற்றம்பலம்(பதிப்பாசிரியர்) -யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -1999
14. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஒரு மீள் வாசிப்பு - கலாநிதி க. குணராசா - யாழ்ப்பாணம் - 2001
15. யாழ்ப்பாண மாவட்ட கோவில் பதிவேடு - கச்சேரி, யாழ்ப்பாணம் -1892

நடராசா கணேசமூர்த்தி
(வட்டுக்கோட்டை திருபர்)
(தொடரும்)

# வடகொரிய தலைவருடன் காணப்படும் மர்மப் பெண் அவரது மனைவி...

**உறுதிப் படுத்தியது அரசாங்க ஊடகம்**



வடகொரியத் தலைவர் கிம் யொங்- உன்னுடன் இணைந்து உத்தியோகபூர்வ வைபவங்களில் கலந்து கொள்ளும் மர்மப்பெண் அவரது மனைவி என்பதை முதல் தடவையாக அந்நாட்டு அரசாங்க ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது.

பையொங்யாங்கில் தேடோங் ஆற்றங்கரையோரமாக ருங்னா எனும் இடத்தில் அமைந்துள்ள ருங்னா பொழுது போக்கு பூங்காவை கிம் யொங் உன் கடந்த புதன்கிழமை திறந்து வைத்தமை தொடர்பில் அரசாங்க ஊடகம் விபரிக்கையிலேயே அவருடன் மேற்படி நிகழ்வில் பங்கேற்ற றி சோல்- யு அவரது மனைவி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

'ருங்னா பொழுதுபோக்கு பூங்காவை வடகொரியத் தலைவர் கிம் யொங்- உன்னும் அவரது மனைவி றி சோல் -யுவும் திறந்து வைத்தனர்' என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிம் யொங்- உன்னுடன் அவரது உத்தியோகபூர்வ வைபவங்களில் பங்கேற்கும் மர்மப்பெண் யாரென்பது தொடர்பில் அண்மைய வாரங்களாக பல்வேறு ஊகங்கள் நிலவி வந்த நிலையில், அந்த ஊகங்களுக்கு மேற்படி செய்தி முடிவு கட்டியுள்ளது.

வடகொரிய ஊடகத்தில் புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு ஒலிபரப்பப்பட்ட 8 நிமிட செய்தியிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் தனது தந்தை கிம் யொங்-இல் மரணமடைந்ததையடுத்து அவரிடமிருந்து கிம் யொங்- உன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

வடகொரியாவில் றி சோல் - யு என்ற பெயரில் பாடகியொருவரும் உள்ள நிலையில் அப்பெண்ணா கிம் யொங் - உன்னின் மனைவி என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அதேசமயம் இந்த ஜோடி எப்போது திருமண பந்தத்தில் இணைந்தது என்ற தகவலும் வெளியிடப்படவில்லை.

றி சோல்- யு, கிம் யொங் உன்னின் பாட்டனார் கிம் இல் சங்கின் 18 ஆவது ஆண்டு ஞாபகார்த்த தினத்தில் கலந்துகொண்டபோதே அவர் அனைவரதும் கவனத்தை ஈர்த்தார். அவரை வடகொரியாவின் பிறிதொரு பாடகியான ஹைறயொன் சோங் - ஹூல் என தென்கொரிய ஊடகம் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் அதி சக்திவாய்ந்த நீர்மின் திட்டம்...



சீனாவில் ஏற்பட்ட அளவு கடந்த மழைவீழ்ச்சி காரணமாக ஹூபி மாகாணத்தில் யங்ட்ஸ் ஆற்றிலுள்ள இராட்சத திறீ கோர்ஜஸ் நீர் மின்சக்தி பிறப்பாக்கி அணையின் இறுதி 32 மின் பிறப்பாக்கிகளும் திறந்து வைக்கப்பட்டதால் அந்த அணை உலகிலேயே அதி சக்தி வாய்ந்த மின் பிறப்பாக்க அணையாக மாறியுள்ளது.

அதிலிருந்து பிறப்பிக்கப்படும் சக்தி 15 அணுசக்தி பிறப்பாக்கிகளிலிருந்து பிறப்பிக்கப்படும் சக்திக்கு சமனானதாகும்.

# பூமிக்கு மேலே 18 மைல் தொலைவிலிருந்து குதித்து சாதனை....

**ஆஸ்திரிய இளைஞரின் துணிகர முயற்சி...**



பூமிக்கு மேலே 18 மைலுக்கும் அதிகமான உயரத்திலிருந்து குதித்த ஆஸ்திரியாவைச் சேர்ந்த சாகஸ கலைஞரான பீலிக்ஸ் போம்கார்ட்னர் புதன்கிழமை சாதனை படைத்துள்ளார்.

அவர் குதித்த உயரம் அதி வேகமாகச் செல்லும் ஜெட் விமானங்கள் பயணிக்கும் பாதையை விட சுமார் மூன்று மடங்கு உயரமானதாகும். பீலிக்ஸ் போம்கார்ட்னர் (43 வயது) நியூ மெக்ஸிக்கோவில் ரொஸ்வெல் நகருக்கு அண்மையில் பறந்த விசேட பறக்கும் உபகரணமொன்றிலிருந்து மணிக்கு 536 மைல் வேகத்தில் விழுந்துள்ளார்.

அவர் எதிர்வரும் மாதம் பரசூட்டில் பூமியிலிருந்து 23 மைல் தூரத்திலிருந்து குதித்து சாதனையை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளார்.

அவரது சாதனை முயற்சியை 1960 ஆம் ஆண்டு பூமியிலிருந்து 19.5 மைல் உயரத்திலிருந்து குதித்து உலக சாதனை படைத்த ஜோ கிட்டிங்கர் (தற்போது 84 வயது) மேற்பார்வை செய்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பரசூட்டில் குதிக்கும் இராணுவ வீரரான பீலிக்ஸ் போம்கார்ட்னர், இதுவரை விமானங்கள், உலங்குவானூர்திகள், தாய்வானிய தலைநகரிலுள்ள 101 மாடி கட்டடம் உள்ளடங்கலான உயரமான கட்டடங்களிலிருந்து 2500 இற்கு மேற்பட்ட தடவைகள் குதித்துள்ளார்.

# உலகிலேயே இழுபடும் தோல்...



உலகிலேயே மிகவும் இளகிய இழுபடும் தோலைக் கொண்டவரென்ற பெயரை பிரித்தானியாவைச் சேர்ந்த 41 வயதான காரி ரேர்னர் என்பவர் பெறுகிறார்.

அவர் 'எஹ்லர்ஸ் - டான் லொஸ்' என்ற அரிய உடல் பாதிப்பு ஒன்றுக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி பரம்பரையியல் ரீதியான பாதிப்பால் ரேர்னரின் தோல் பலவீனமடைந்து மிகவும் நெகிழ்ச்சித் தன்மையுடன் காணப்படுகிறது.

அவர் தனது வயிற்றுத் தசையை இழுத்து அதனுள் பியரை ஊற்றி வைத்தும் கழுத்துத் தசையை வாயை மறைக்கும் வகையில் இழுத்தும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.

உலகில் 10,000 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் காணப்படும் இந்தப் பாதிப்பால் அநேக சந்தர்ப்பங்களில் எலும்பு பொருத்துகளும் குருதிக் குழாய்களும் பல வீனமடைவதே வழமையாகவுள்ளது.

ஆனால் ரேர்னருக்கு ஏற்பட்டது போல் தோல் பலவீனமடைவது அபூர்வமான நிகழ்வாக கருதப்படுகிறது.

தோலின் அதிசயிக்கத்தக்க இழுபடும் தன்மை காரணமாக ஹொரர்ஸ் சாகஸ நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரணாப் முகர்ஜிக்கு எதிராக சங்மா வழக்கு தொடர்வது அவருடையே தனிப்பட்ட முயற்சி

## இதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை; பா.ஜ.க. தெரிவிப்பு





டில்லி:

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு எதிராக சங்மா உச்சநீதிமன்றத்தை அணுகினால் அதற்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பிரணாப் முகர்ஜி தனது நிதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததோடு, இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார். ஆனால், அவர் இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக அளித்த கடிதத்தில் உள்ள கையெழுத்து போலியானது என்று கூறி தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சங்மா தேர்தல் ஆணையத்திடம் மனு கொடுத்தார்.

மேலும், இந்த விவகாரம் குறித்து உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடரவிருக்கிறார்.

இந்நிலையில், இதுகுறித்து பா.ஜ.க. செய்தித்தொடர்பாளர் ராஜிவ் பிரதாப் ரூடி கூறுகையில், 'பிரணாப் முகர்ஜிக்கு எதிராக சங்மா, உச்சநீதிமன்றத்திற்கு சென்றால் அது அவருடைய தனிப்பட்ட முயற்சி. அதற்கும் பா.ஜ.க.வுக்கும் எந்த தொடர்பும் இல்லை. பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாக பதவியேற்றதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்' என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சங்மாவுக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள பா.ஜ.க., அ.தி.மு.க., ஜனதா தளம், பிஜூ ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுச்சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்ய முடியாது

## மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி:

போராட்டங்களின்போது, பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்ய முடியாது என மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது.

முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியான பிரகாஷ் சிங், உச்சநீதிமன்றத்தில் பொதுநலன் கோரும் மனுவொன்றை தாக்கல் செய்தார். அவர் அதில், 'அரசியல் கட்சிகள், போராட்டத்தில் ஈடுபடும் போது பெரிய அளவிலான வன்முறைகள் நிகழ்கின்றன. இதன்போது பொதுச் சொத்துகள் சேதப்படுத்தப்படுகின்றன. வீதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகளில் மறியலில் ஈடுபடுவதால், போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பெரிய அளவில் பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் இடம்பெறும் போராட்டங்களை தடுக்க, வழிகாட்டிக் குறிப்புகளை உருவாக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் சிங்வி, முகோபாத்யாயா ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வின் முன், கடந்த 17 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது, 'வன்முறையில் ஈடுபட்டு பொதுச்சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும், அரசியல் கட்சிகளை, தற்போதைய சட்ட விதிகளின் கீழ் தடை செய்ய முடியுமா? அவற்றின் அங்கீகாரத்தை இரத்துச் செய்யலாமா? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், இது தொடர்பாக மத்திய அரசு ஒரு வாரத்திற்குள் பதில் அளிக்க வேண்டும்' என உத்தரவிட்டனர்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் ரோகின்டன் நாரிமன் கூறியதாவது, 'போராட்டத்தில் ஈடுபடும்போது அரசியல் கட்சியினர் பொதுச் சொத்துகளை சேதப்படுத்துவதற்காக குறிப்பிட்ட அரசியல் கட்சியின் அங்கீகாரத்தை, தேர்தல் ஆணையமோ நீதிமன்றமோ இரத்துச் செய்ய முடியாது. உச்சநீதிமன்றமே, இது தொடர்பாக வழக்கு ஒன்றில் தீர்ப்பு அளித்துள்ளது என்றார்.

# காஷ்மீர் பகுதியில் சிறிய அளவில் நிலநடுக்கம்



ஸ்ரீநகர்:

ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பகுதிகளை மையமாகக் கொண்டு, காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 4.2 ஆகப் பதிவான இந் நிலநடுக்கத்தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதி, பூகம்பத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



இமாச்சல் பிரதேசம், சிம்லாவில் பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பாறைகள் சரிந்து விழுந்ததில் சேதமடைந்த காரை படத்தில் காணலாம்.

# திருடிய பணம், நகைகளை உரிமையாளரிடம் சேர்த்த திருடன்

சென்னை:

வீட்டினுள் நுழைந்து திருடியமைக்காக மன்னிப்புக்கோரிய திருடனொருவன் அங்கு தான் திருடிய பணம் மற்றும் நகைகளை சம்பந்தப்பட்ட வீட்டின் முன்னே போட்டுவிட்டு சென்ற சம்பவம் ஒன்று சென்னை அருகே இடம்பெற்றுள்ளது.

பெரும் ஆச்சரியத்தையும், விநோதத்தையும் ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, சைதாப்பேட்டை ஆர்.ஆர்.நகரைச் சேர்ந்தவர் எச். அஸார் ஹுசைனின் வைத்தியரான உசேனின் வீட்டில் சமீபத்தில் நுழைந்த திருடனொருவன், அங்கிருந்து 70 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 இலட்சம் ரூபா பணத்தையும் திருடிக்கொண்டு சென்றுவிட்டான். இதுதொடர்பில் அஸார் கொடுத்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதனிடையே, கடந்த புதன்கிழமையன்று மாலை அசாரின் வீட்டின் முன்பு ஒரு பை இருந்தது. அதனை திறந்து பார்த்தபோது வீட்டிலிருந்து திருடப்பட்ட பொருட்களுடன், வீட்டில் திருடியதற்கு மன்னிப்பு கோரப்பட்ட ஒரு கடிதமும் இருந்ததைக் கண்டு அஸார் ஆச்சரியமடைந்தார்.

# லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரிக்கு நிர்வாக கண்காணிப்புக்குழு நியமிப்பு

## வட மாகாண பிரதம செயலாளர் விஜெயலட்சுமி ரமேஷ்

(யாழ்ப்பாணம் மேலதிக நிருபர்)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியை மேற்பார்வை செய்து கண்காணிப்பு மற்றும் தீர்மானங்களை எடுக்க வடமாகாண சபையின் பிரதம செயலாளர் விஜெயலட்சுமி ரமேஷ் தலைமையில் கண்காணிப்புக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக் குழுவின் செயலாளராக இக்கல்லூரியை பரிபாலிக்கும் வட இலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவர் டாக்டர் எஸ். ஸ்ரீவிக்கினேஸ்வரா வட மாகாண நிர்வாகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் நிர்வாகத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் வட இலங்கை சுதேச வைத்திய சபையின் சிரேஷ்ட நிர்வாகிகள், பேராசிரியர்கள், வட மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், வட மாகாண சுதேச வைத்திய அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் சியாமா துரைரத்தினம் முதலானோர் இக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

நியமனக்குழு பரீட்சை வழிகாட்டல் குழு போன்ற உப குழுக்களும் இதன் போது செயற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆசிரியர் இடமாற்றங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வடமாகாணப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களில் இடமாற்றத்திற்கு தகுதியுடையவர்களின் விண்ணப்பங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளதாக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பளார் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் இடமாற்ற விண்ணப்பங்கள் தகுதியுடைய ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களுடன் முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, இடமாற்றத்தினைச் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணங்களின் பிரதிகளை இணைத்து உரிய வலயக்கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னராக அனுப்பவேண்டும்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு அமைவாக உள்ள விண்ணப்பப் படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# நல்லூர் உற்சவத்தில் தெய்வீக இசையரங்கு

உடுவில்,

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நல்லூரில் அமைந்துள்ள தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 4ஆம் நாள் நிகழ்வாக இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு பிரம்மஸ்ரீ விஸடவ பிரசன்னாவின் பாட்டுக்கச்சேரி நடைபெறவுள்ளது.

# சிறப்பு மலர் வெளியீடும் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்

உடுவில்,

தாவடி வடக்கு, கிராம அபிவிருத்திச் சங்க கடித உறைத் தொழிலகத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொக்குவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இ. செந்தில்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், கிராம அபிவிருத்தி திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் ஜே.சி. பெலிசியன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஜெயராசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

மலரினை வலி. தெற்கு பிரதேச செயலாளர் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பொ. நடராசா முதற் பிரதியைப் பெறவுள்ளார்.

வாழ்த்துரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசாவும் நூல் அறிமுகவுரையைக் கிராம அலுவலர் வே.நாகேந்திராவும் நூலின் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரனும் வழங்கவுள்ளார்கள்.இந்நிகழ்வில் மூத்த உறுப்பினர்கள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

# சுதுமலை சனசமூக நிலையத்தில் வாசிப்பதற்கு பத்திரிகைகள் இல்லை

மானிப்பாய்,

சுதுமலை, யுவசக்தி சனசமூக நிலையத்திற்கு பத்திரிகைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

மேற்படி சுதுமலை தெற்குப் பகுதியில் உள்ள யுவசக்தி சனசமூக நிலையத்தில் பத்திரிகைகள் ஏதுமின்றி வெறிச்சோடிய நிலையில் காணப்படுவதாகவும் அங்கு பத்திரிகைகளை படிக்க வருபவர்கள் பத்திரிகைகள் இல்லாமையினால் அதிருப்தியடைவதுடன் ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச் சனசமூக நிலையத்திற்கு என ஓர் நிர்வாகம் இயங்கி வருவதாகவும் அப்பகுதியில் கோயில் மற்றும் பல நிர்வாகங்கள் மிகச் சிறப்பாக இயங்கி வருவதாகவும் தெரிவிக்கின்ற மக்கள் இச் சனசமூக நிலையத்திற்கு பத்திரிகை பெற்றுக்கொடுக்க முன் வராமையினையிட்டு பெரும் கவலை வெளியிட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடன்தலையீடு செய்து பத்திரிகைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கோருகின்றனர்.

# மாணவர்கள் முத்தமிழ்களையும் கற்பதனூடாக சிறந்த சமுதாய வாழ்வினை பெற்றுக்கொள்ளமுடியும்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவனேஸ்வரன்

தெல்லிப்பழை,

கல்வியைப் பெறுகின்ற மாணவர்கள் சமூகத்தோடு இணைந்த வாழ்வினை வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும். வெறுமனே கல்வியினைப் பெற்று இயந்திர மனிதனாக இல்லாது கல்வியுடன் பொருத்தப்பாடுடைய சமுதாய வாழ்வினைப் பெறுவதற்கு இயல், இசை, நாடகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதனூடாக சமுதாயத்துடன் இசைந்து போகும் வாழ்வினை பெற்றுக்கொள்ள முடியும் என மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற விபுலானந்தர் தின முத்தமிழ் விழா நிகழ்வில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சிறப்பையும் பெருமையையும் கொண்டாடுவதன் மூலம் எமது கல்லூரி பெருமை பெறும். எமக்குக் கிடைத்த வாய்ப்பு சுவாமி விபுலானந்தர் எமது கல்லூரியில் அதிபராக இருந்து உலகம் முழுவதும் தமிழ்ப்பணியும் ஆன்மிகப்பணியும் செய்யும் பேறு கிடைத்தது ஆகும். 1920-1922 வரை சுவாமி விபுலானந்தர் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இத்தனை சிறப்பு வாய்ந்ததாக இக்கல்லூரி விளங்குகின்றது.

முன்னைய காலம் போன்று மேலும் சிறப்படைவதற்கு சாதித்து காட்டவேண்டிய பொறுப்பு மாணவர்களதும் ஆசிரியர்களினதும் கையில் உள்ளது. நான் நம்பிக்கை கொள்ளும் ஆசிரியர்கள் மூலம் வழிப்படுத்துகின்ற மாணவர்கள் மூலம் கல்விப் புலத்தில் மீண்டும் மதிக்கப்படுகின்ற கல்லூரியாக வளர்ந்து வருகின்றது எனக் கூறுவதில் பெருமை கொள்கின்றேன்.

இன்றைய விழாவினை முத்தமிழ் விழாவெனப் பெயரிட்டுள்ளோம். முத்தமிழ் விழா எனும்போது இயல், இசை, நாடகம் என்பன விளங்குகின்றது. இன்றைய நூல் சுவாமி விபுலானந்தரை நினைவில் இருத்தி நாம் பெருமை கொள்கின்ற நாள்.

மாணவர்கள் வகுப்பறைக் கற்றலுக்கு அப்பால் கல்வியினைப் பெறுகின்ற நிகழ்வாகவும் கொண்டாடுவதில் நாம் பெருமை கொள்கின்றோம். எதிர்காலத்தில் திறந்த வெளி அரங்கில் மாலை வேளையில் கொண்டாடப்படவேண்டும். எனும் விருப்பு என்னிடம் உள்ளது. சுவாமி விபுலானந்தர் உலாவித் திரிந்த மண்ணில், அவர் அதிபராக பதவி வகித்த கல்லூரியில் யாழ்ப்பாண கல்வி புலத்திற்கு காத்திரமான கல்விப்பங்களிப்பினை வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

# நல்லூர் உற்சவத்தின் இன்றைய நிகழ்வு

கோப்பாய்,

நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவினை முன்னிட்டு இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தினால் ஆன்மிகச் சிந்தனையுடன் கூடிய சிறப்புச் சொற்பொழிவு இன்று (வெள்ளிக்கிழமை) நாளை (சனிக்கிழமை), மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் சிறப்புச் சொற்பொழிவுகள் முறையே இளம் சொற்பொழிவாளர் தி.பகீதரனின் புலவர் போற்றிடும் புலவர், ஈஸ்வரனின் நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும், சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே என்னும் தலைப்புகளில் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து இளவாலை, ஆவரங்கால், காரைநகர், புத்தூர், சங்கானை, திடற்புலம், கோண்டாவில் ஆகிய இடங்களின் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தின் இரண்டாம் நாளன்று வள்ளி தெய்வானை சமேதராய் வேல் வீதியுலா இடம்பெறுவதை படங்களில் காணலாம். (படங்கள்: நெடுந்தீவு நிருபர்)

# மஹோற்சவம்

வடமராட்சி,

அல்வாய், வேவிலந்தை அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 108 சங்காபிஷேகம், தைலாப்பியங்கம் என்பன நடைபெற்று மாலை வேட்டைத்திருவிழாவும் சப்பரத் திருவிழாவும் இடம்பெறும். 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 1ஆம் திகதி புதன் கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# யாழ். இந்துக் கல்லூரிக்கு நூல்கள் அன்பளிப்பு

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 2005 உயர்தரப்பிரிவில் கல்வி கற்று தற்போது வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வசித்து வருகின்ற கல்லூரியின் பழைய மாணவர்களினால் கல்லூரி நூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

சுமார் 330,000ரூபா பெறுமதியான நூல்கள் நூலகப் பாவனைக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இந் நூல்கள் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நிகழ்வில் வைத்து பழைய மாணவர்களால் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு பழைய மாணவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களின் கண்காட்சி கல்லூரியின் நூலகத்தில் இரு தினங்கள் இடம்பெற்றது. இக்கண்காட்சியை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

இந்நூல்கள் கையளிப்பு தொடர்பாக கல்லூரி அதிபர் கருத்துத் தெரிவிக்கும் போது 2005 உயர்தரப் பிரிவு மாணவர்களின் இம் முயற்சிக்கு பாராட்டுத் தெரிவிப்பதுடன் இது போன்று கல்லூரியில் படித்து வெளியேறிய மாணவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை கல்லூரிக்கு ஆற்றவேண்டுமெனத் தெரிவித்தார்.

# அரிவாட்டாய நாயனார் புராண கருத்தரங்கும் கலந்துரையாடலும்

தெல்லிப்பழை,

பெரிய புராணத்தில் அரிவாட்டாய நாயனார் புராணக் கருத்தரங்கும் கலந்துரையாடலும் 1ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவவித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கடவுள் வாழ்த்தினை சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் இசைப்பார். வரவேற்புரையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகனும் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் வழங்குவர்.

நிகழ்வில் அரிவாட்டாய நாயனார் புராணக் கட்டமைப்பு' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் தி. செல்வமனோகரனும் அமுது செய்விக்க மூளும் அன்பு' என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின் செல்வர் இரா. செல்லவடிவேல், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் சுகந்தி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் செயற்படுவர்.

அண்ணலார் அறுத்த கூலி' என்ற பொருளில் ஆடல் அளிக்கை இடம்பெறும். இதனை சுதுமலை புகழ் கல்வி நிறுவன மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சமய இலக்கியங்கள் மீது இளையோர் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் ஆய்வு நோக்கில் இலக்கியங்களை அணுகும் திறனை வளர்த்தெடுக்கும் வகையிலும் இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்படவுள்ளதாகவும் ஆர்வமுள்ள எவரும் இதில் கலந்து பயன்பெறலாம் எனவும் நிகழ்வின் அமைப்பாளர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸும் விரிவுரையாளர் ச. லலீசனும் தெரிவித்துள்ளனர்.

# நாட்டியமயில் நடனப்போட்டி

2012ஆம் ஆண்டுக்கான நாட்டியமயில் நடனப்போட்டி நாளை சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.



வவுனியா, புதுக்குளம், மகா வித்தியாலயத்தின் 96ஆவது ஸ்தாபக தின விழா அண்மையில் நடைபெற்றபோது, பாடசாலை அதிபர் தா.அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், அதிதிகள் அமர்ந்திருப்பதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா வடக்கு, வலய ஆசிரிய ஆலோசகர் அ. அமலேஸ்வரன் சாதனை படைத்த மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : திருநெல்வேலி நிருபர்)

30

கடந்த 20ஆம் திகதி வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி...



# மாமன்னன் சங்கிலியன்

செங்கை ஆழியான்

"அவற்றை தாங்கள் விரும்புவீர்களோ தெரியாது. எனவே தவிர்த்துவிட்டேன். நான் தங்கள் முன் இப்போது அரசனின் ஒரு தூதுவனாக வந்திருக்கிறேன். மன்னர் தங்களுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்ய விரும்புகிறார். தாங்கள் விரும்பில் நாளை காலை மன்னர் தங்களை இயக்கச்சி ஊடுபாவு தடை முகாமில் சந்திப்பார்...."

பிரகன்சா மகிழ்வோடு ஒப்புக்கொண்டான்.

காலை பிறந்து. இரு சாராரும் தம் பரிவாரங்களுடன் இயக்கச்சி ஊடுபாவு தடை முகாமில் கூடினர். பிரகன்சாவும் சங்கிலி மன்னனும் இரண்டு ஏறுகள்போல அமர்ந்திருந்தனர். நீண்ட அமைதி நிலவியது. பிரகன்சா அமைதியைக் கலைத்தான்.

"நாங்கள் கைப்பற்றிய இராசதானியை மீண்டும் சங்கிலி மன்னனே முடி புனைந்து ஆளலாம். அரியணையை பழைய மன்னனிடம் விட்டுக் கொடுக்கிறோம். ஆனால், அதற்குப் பதிலாக மன்னன் ஆண்டு தோறும் போர்த்துக்கேயருக்கு திறை செலுத்த வேண்டும். பன்னிரண்டு கொம்பன் யானைகளும், 1200 பர்தாங்கு போர்த்துக்கேயப் பணமும் யாழ்ப்பாண அரசன் திறையாகச் செலுத்த வேண்டும்'' என்றான்.

திறை நிபந்தனையை சங்கிலி எதிர்பார்த்தான். அதனால் அதிர்ச்சியடையவில்லை. முடி மீண்டும் கிடைத்தால் போதும்.

"தங்கள் முதல் நிபந்தனைக்கு ஒத்துக் கொள்கிறேன்"

"யாழ்ப்பாண மன்னன் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேரும் எவரையும் தண்டிக்கக்கூடாது. பிரசாரம் செய்யும் குருமாரை அனுமதிக்க வேண்டும். முக்கியமானது விதியபண்டாரத்திடமிருந்து பெற்ற அல்லது அபகரித்த அனைத்து திரவியங்களையும் எங்களிடம் தர வேண்டும். அவன் கவர்ந்து வந்த புத்த தந்த தாதுவை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். விதிய பண்டாரத்தின் ராணிகள் கோட்டைக்கு அனுப்ப எம்மிடம் தரப்படவேண்டும். மன்னார் தீவு எமக்குத் தரப்பட வேண்டும்''

ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை. முடியை முதலில் பெறுவோம். பிறகு மற்றவற்றைப் பார்க்கலாம் என்றெண்ணிய சங்கிலிக்கு அடுத்து நிகழ்ந்தவை பேரிடியாக அமைந்தன.

"கப்பித்தான் பிரகன்சா அவர்களே, தங்கள் நிபந்தனை யாவற்றிற்கும் ஒப்புக்கொண்டோம். எங்கள் வேண்டுகோள் ஒன்றிற்கு நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்."

"என்னவென்று சொல்லுங்கள்.."

"தங்களிடம் சிறைப்பட்டிருக்கும் பட்டத்து இளவரசரையும் சேனாதிபதியையும் விடுவிக்க வேண்டும்"

"அவற்றைக் கேளாதீர்கள். அது முடியாது மன்னா! தாங்கள் எங்களுடைய உடன்படிக்கைகளை மதித்து நடக்கிறீர்களா என்பதைப் பார்க்க அவர்களைப் பிணையாக வைத்திருக்கப் போகிறோம். பின்னரே விடுவோம்"

சங்கிலியால் எதுவும் பேச முடியவில்லை.

நிலவுக் காலமின்மையால் வானத்தில் கும்மிருட்டு கவிந்திருந்தது. ஆங்காங்கு தாரகைகள் நம்பிக்கையோடு கண் சிமிட்டின. துயரத்தோடு அவற்றைக் கண்ணிமைக்காது சங்கிலி பார்த்தான். அவனை அறியாமல் இறந்து போன வாழ்க்கை புரளத்தொடங்கியது. இன்னும் வாழ்க்கை எத்தனை நாளுக்கு? எத்தனை நாளுக்குத்தான் மறைப்பது?

"சங்கிலி நீ கண்டதென்ன? துரோகம்! கனகராஜன் இறந்தானோ அன்று தொட்ட துயரம்? கழிவிரக்கம். கழுவாய் இல்லையா?"

அரசமாதேவி வந்தாள்.

"சுவாமி, ஏன் துயரம் இராச்சியம்தான் மீளக்கிடைத்து விட்டதே?"

"நடந்தவற்றை எண்ணிக்கொண்டேன் தேவி... நீ நினைப்பது போல உன் கணவன் உத்தமனல்லன். அப்படி ஒரு எண்ணம் இருந்தால் அதை மாற்றிக்கொள்.."



"பிரபு. நீங்களேன் இன்று என்னவெல்லாமோ பேசுகிறீர்கள்?"

"உனக்கு இன்று எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன் கேள்"

மன்னன் கூறத்தொடங்கினான்.

"மன்னன் ஒருவனின் மகனாய்ப் பிறந்தேன். ஆனால், வைப்பாட்டி மகன் என்ற இழிபெயர் என்னோடு ஒட்டிக்கொண்டது. கேலிக்கு ஆளானேன் எனக்கு யாழ்ப்பாணத்தின் முடி கிடைக்க வாய்ப்பே கிட்டாது. அதை எவ்வாறாயினும் அடைந்தே தீர வேண்டும். நானும் கனகராஜனும் திட்டம் போட்டோம். அத்திட்டத்தின் விளைவாக இரண்டு மூத்த பட்டத்து இளவரசர்களையும் சதிசெய்து கொன்றோம். பழியை வன்னியர் மீது போட்டோம். அடுத்த பட்டத்து இளவரசர் பரநிருபசிங்கரை கொலை செய்விக்க நேரவில்லை. அதற்குள் முடி எனதாகி விட்டது. என் தந்தைக்கு எம் சதி கசிந்திருந்தது. முடியை இழக்கக்கூடாது என்பதற்காக உதயவல்லியை ஏமாற்றினேன்'' சங்கிலி மன்னன் நிறுத்தினான். "எல்லாம் விதி என்று மறந்து விடுவோம். முடியை உரியவர்களிடம் கொடுத்து விடுங்களேன்..."

"அவர்கள் ஒருவரும் இங்கில்லை. எல்லோரும் அந்நியருடன் சேர்ந்துவிட்டனர். நான் மன்னனாகிய வழி பிழையானதாகினும் நாட்டு மக்களுக்கு துரோகம் செய்யவில்லை. நாட்டை அந்நியர் வசம் போகவிடவில்லை. ஒப்பந்தப்படி போர்த்துக்கேயருக்கு திறை செலுத்தப்போவதில்லை. அதற்கு என் பட்டத்து மகன் பலியாயினும் நாடே முக்கியம்.."

போர்த்துக்கேய மரக்கலங்கள் அடிவானத்தில் மறைந்தன.

(முற்றும்)

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

## அறிஞர் ஏழாலை க.அருமைநாயகம்

## இவரைப்பற்றி 25

**1983 ஜீலைக் கலவரத்தின்போது காணாமற் போன ஏழாலை க. அருமைநாயகம் விரிவுரையாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் ஆகிய உயர் பதவிகளை வகித்தவர். தாம் வாழ்ந்த காலத்திலே வரலாறு, இந்துப் பண்பாடு என்பன தொடர்பாக ஆய்வு செய்து பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். தலைசிறந்த பேச்சாளரான இவர் மறைந்து 29 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இவரது பணிகள் இன்னமும் சிறப்புற்றே விளங்குகின்றன. இவரைப் பற்றி 25 விடயங்களை இங்கே தருகின்றோம்.**

❖ அருமைநாயகம் ஏழாலை வடக்கு 'இந்தன்' குறிச்சியில் 1939ஆம் ஆண்டு மார்கழி 30 ஆம் திகதி பிறந்தார்.

❖ தந்தையார் ஏழாலை மாப்பாணர் சுப்பிரமணியம் கதிரவேலு. தாயார் அவ்வூர் சின்னத்தங்கம் என்பவராவர்.

❖ இவர் ஏழாலைப் பெரியார்களான சி.வை. தாமோதரம்பிள்ளை, (1832 - 1901) சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம், (1911 - 1996) பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி, (1922 - 1977), பண்டிதர் கலாநிதி மு. கந்தையா (1917 - 2002) ஆகிய அறிஞர் வரிசையில் வைத்து மதிக்கப் பெறுபவர்.

❖ ஏழாலை வடக்கு, அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியினையும் கற்றார்.

❖ பேராதனைப் பல்கலைக்கழகத்திலே வரலாற்றுப் பாடத்தை சிறப்பாகக் கற்று அதிலே சிறப்புச் சித்தியும் பெற்றார்.

❖ இவர் அக்காலத்தில் வேலையற்ற தமிழ் பட்டதாரிகள் சங்கத் தலைவராக இருந்துள்ளார்.

❖ 1961 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் தலைவராக பேராசிரியர் அ. சண்முகதாஸ் இருந்தபோது அச்சங்கத்தின் உப தலைவராக க. அருமைநாயகம் இருந்து சங்க வளர்ச்சிக்கு உழைத்திருக்கின்றார்.

❖ யாழ்ப்பாணக் கல்லூரியில் அருமைநாயகம் ஆசிரியராகவும் பின்னர் கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களிலும் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

❖ நீண்டகாலம் இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளராகக்கடமையாற்றியுள்ளார்.

❖ 1967 ஆம் ஆண்டு இணுவிலைச் சேர்ந்த வை.சி. எனும் பெரியார் சிவகுருவின் மகளான பரிமளம் என்பவரைத் திருமணம் புரிந்து நல்வாழ்வு வாழ்ந்தார்.

❖ தமிழ், ஆங்கிலம், சிங்களம் எனும் மும்மொழிகளிலும் மிகவும் பாண்டித்தியமுடைய அருமைநாயகம் பல்கலைக்கழக சஞ்சிகைகளான இளங்கதிர், இந்து தர்மம், கல்வி சிந்தனை எனும் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் அரிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

❖ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் 'சிந்தனை' எனும் சஞ்சிகை ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து தான் வெளிவந்தது. அக்காலத்தில் அதன் நிர்வாகியாக அருமைநாயகம் இருந்திருக்கின்றார்.

❖ இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்கும் காலத்தில் 'சுப்பிரமணிய பாரதி' எனும் கட்டுரையை எழுதி தமது எழுத்துப் பணியைத் தொடங்கினார். இக்கட்டுரை கல்லூரியின் ஆண்டுச் சஞ்சிகையில் (Union College Magazine - 1955) வெளிவந்தது.

❖ 1956ஆம் ஆண்டு யூனியன் கல்லூரியிலிருந்து வெளியிடப்பட்ட 'பலியிடுதல்' சஞ்சிகையில் பல சமய சீர்திருத்தக் கருத்துகளை எழுதி வந்தார்.

❖ 'இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை' (சிந்தனை ஏப்ரல் 1967), 'அரசாங்கமும் சைவ சமயக் கல்வியும்' (இளங்கதிர் -1967), 'சைவசமய விழிப்புணர்ச்சி - 19 ஆம் நூற்றாண்டு' (இணுவில் சிவகாமி அம்மன் கோயில் சித்திரத் தேர்ப்பணிச்சிறப்பு மலர் 1978), 'அநுராதபுரம் விவேகானந்த சபை பொன்விழா மலர்) 1975), 'தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர்' (நாவலர் நூற்றாண்டு மலர் 1979) என்பன இவரது பிரசித்தி பெற்ற சமய வரலாற்றுக்கட்டுரைகளாகும்.

'கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்தங்கள்' (சிந்தனை ஜனவரி 1968), 'போர்த்துக்கீசரும் கோட்டை இராச்சியமும்' (சிந்தனை ஏப்ரல் 1968), வரலாற்று மாணவன் கண்ணில் 'குவெய்றொஸ்' (இளங்கதிர் 1961 - 1962) என்பன இவரது வரலாறு சார் கட்டுரைகள்.

❖ பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த 'கல்வி' என்ற சஞ்சிகையில் இவரால் எழுதப்பட்ட 'வரலாற்று விடை எழுதும் முறை' (1968) எனும் கட்டுரை உயர்தர மாணவருக்கு மிகவும் உபயோகமானது.

❖ சுவாமி ஞானப்பிரகாசர் மீது மிகுந்த ஈடுபாடுடைய இவர் 'சுவாமி ஞானப்பிரகாசரும் வரலாற்று ஆராய்ச்சியும்' எனும் கட்டுரையை எழுதி வெளியிட்டார்.

❖ நூல் விமர்சனத் துறையில் இவருக்கிருந்த ஆற்றலை கலாநிதி கைலாசபதி 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' (1966) எனும் நூலுக்கு இவரால் எழுதப்பட்ட மதிப்புரையிலிருந்து அறியலாம்.

❖ இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'A Brief History of the Ramakrishna Movement in Sri Lanka' (கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் பொன் விழா மலர் 1980), 'Sri Mutu Coomaraswamy' (Tribune -1979) எனும் கட்டுரை இவரது ஆங்கிலப் புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

❖ 1980 மார்ச் மாதம் நடைபெற்ற தென்னாசியவியற் கருத்தரங்கில் அருமைநாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சமூகச் சீர்திருத்தம் சில அம்சங்கள்' (1900 - 1957) எனும் கட்டுரை இலங்கைத் தமிழர் வரலாறு தொடர்பான சிறந்த விமர்சனக் கட்டுரையாக விளங்குகின்றது.



❖ 1980 - 1981 காலப்பகுதியில் பத்திரிகைகளில் இவரால் தொடர்ச்சியாக எழுதப்பட்ட 'உலக அரசியல்' தொடர்பான விமர்சனங்கள் அக்காலத்தில் உலகில் உள்ள பல அரசியல் அறிஞர்களது கவனத்தையும் ஈர்த்தது.

❖ யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸின் இணைக் காரியதரிசிகளுள் ஒருவரான அறிஞர் சபாபதிப்பிள்ளை துரைராஜசிங்கத்தின் எழுத்துலக பங்களிப்புப் பற்றி இவர் எழுதிய கட்டுரை இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர் வாழ் தமிழர்களுக்கு மிகவும் உபயோகமானதாக இருந்தது.

❖ இலங்கையின் தென்பகுதியில் இவர் நீண்டகாலம் பணிபுரிந்தாலும் தமது ஏழாலைக் கிராமத்தை இவர் மறக்கவில்லை என்பதற்கு ஏழாலை முனியப்பர் ஆலய பரிபாலன சபை, ஏழாலை பாரதி சனசமூக நிலையம் என்பனவற்றின் காப்பாளராக இருந்து செயலாற்றியமை தக்கசான்றாகும்.

❖ இவரின் புதல்வரான அ.யோகேந்திரன் அமெரிக்காவில் பொறியியலாளராகப் பணியாற்றுகின்றார். புதல்வி சாதனி டென்மார்க்கில் வசித்து வருகின்றார். இவர் மூலம் அருமைநாயகம் எழுதிய கட்டுரைகள் நூல் வடிவில் கொண்டுவரப்பட்டால் பலரும் பயன்பெறுவர்.

முருகேசு கௌரிகாந்தன்
விரிவுரையாளர்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்

# யாழ்ப்பாணத்தில் திரை அரங்குகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## லோகநாயகி திரை அரங்கு (1970 1989)

1970களில்பிரமாண்டமான முறையில் வல்வெட்டித்துறை சிவன் கோவிலுக்கு அருகில் லோகநாயகி என்னும் பெயரில் காங்கேசன்துறையைச் சேர்ந்த வைத்தியலிங்கம் என்பவரால் பிரமாண்டமான திரை அரங்கு அமைக்கப்பட்டது.

இவ்வரங்கின் அரங்க மண்டபம் பிரமாண்ட தகரக் கொட்டகையாகவும் பல்கனி, இயந்திர அறை என்பன சுவர்களைக் கொண்ட மாடியாகவும் அமைக்கப்பட்டது. இரு பக்கம் மரக்கதவுகள் போடப்பட்டு ரசிகர்கள் வெளியேற வும் உட்செல்லவும் ஏற்றதுபோல் அமைக்கப்பட்டிருந்தன. உட்புறம் முழுவதும் மரக்கதிரைகள் போடப்பட்டு வசதியான ஆசனங்களாக இருந்தன. பல்கனி பஞ்சு ஆசனங்களாக 30 ஆசனங்கள் போடப்பட்டு இருந்தன. ஆரம்பத்தில் இங்கு திரையிடப்பட்ட பக்தி திரைப்படங்கள் அதிகமாக மக்கள் வரவேற்பைப் பெற்றது. இதனால் இத் திரையரங்கு எல்லாத் தரப்பினரிடமும் சிறப்பான திரையரங்காக பெயரெடுத்துக் கொண்டது. அந்த வகையில் 'சரஸ்வதி சபதம்', 'பூம்புகார்', 'கண்ணகி' போன்ற படங்கள் இங்கு பல காலமாக திரையிடப்பட்டன. மேலும், இந்தியாவிலும் லோகநாயகியிலும் சில படங்கள் ஒரே தினத்தில் வெளியிடப்பட்டன. இதற்குக் காரணம் கடல்வழியாக திரைப்படப் பெட்டிகள் கொண்டுவரப்பட்டு திரைப்படம் திரையிடப்பட்டன. இவ்வாறு லோகநாயகி அரங்கு சிறப்பாக இயங்கிய போதும் 1989 இல் ஏற்பட்ட இனப்பிரச்சினையுடன் இடைநிறுத்தப்பட்டு தற்போது திரை அரங்க மண்டபம் ஏதுமில்லாமல் முன் மண்டபத்துடனும் பழைய கதிரைகள் மற்றும் மங்கிப்போன போஸ்டர்களுடனும் அமைதியாகக் காணப்படுகிறது.



லோகநாயகி திரை அரங்கின் தற்போதைய தோற்றம்

**தென்மராட்சிப் பகுதிகளில் காணப்பட்ட திரை அரங்குகள்**

தென்மராட்சிப் பகுதிகளிலும் விவசாய மக்களையே மையமாகக் கொண்டு சில திரையரங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வகையில் தெய்வேந்திரா, வேல் சினிமா தற்பொழுது பாலா சினிமா போன்றவற்றை நோக்கலாம். இத் திரையரங்குகள் பற்றிய கண்ணோட்டத்தை அடுத்த வாரம் இப்பகுதியில் பார்ப்போம்.

- ஆர். அஜித்

# வல்வெட்டித்துறை நகர சபைக்கெதிராக மக்கள் வீதியில் இறங்கிபோராட்டம்

**நகரசபைத் தலைவர் அனந்தராஜ் தலையிட்டு போராட்டத்தை நிறுத்தினார்**

நெல்லியடி,

வல்வெட்டித்துறை மயிலணை பொது மயானத்திற்கு நகர சபையினர் மதில் அமைப்பதால் தமது உரிமை பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டி பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வல்வெட்டித்துறை மயிலணை மயானத்தினுடைய வீதியோர மதிலை நிர்ணயிக்கப்பட்ட இடத்திலிருந்து 8மீற்றர் தூரம் உட்புறமாக அமைப்பதால் சுடலைக்குரிய நிலம் அரச நிலமாக்கப்படுகிறது எனக் கண்டித்தே பொது மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மதிலமைக்கும் பணி நேற்றுக்காலை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அங்கு கூடியிருந்த மக்கள் சுலோக அட்டைகளை காட்டி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் வல்லை நகர சபையின் மயானத்துக்கு ஏன் இந்தப் பாகுபாடு, மயான நில அபகரிப்பு ஒரு பதவி ஆசையா, இறந்த பின்னும் நிம்மதியற்ற இறுதிப் பயணம், வீட்டுக்கு ஒரு நீதி மயானத்துக்கு ஒரு நீதியா ...? வேண்டாம் வேண்டாம் மயான ஆக்கிரமிப்பு வேண்டாம். புதைகுழிகளைத் தோண்டும் வல்லை நகர சபை நரியே ஆகிய வசனங்கள் எழுதப்பட்டிருந்தன.

இச் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அனந்தராஜ் மதிலமைப்பதை இடைநிறுத்துவதாக உறுதியளித்ததுடன் மக்களின் நியாயக் கோரிக்கை கடிதத்தையும் கேட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நகர சபை உப தலைவர் கந்தசாமி சதீஸ் மக்களின் பக்கம் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். அரச ஊழியர்களின் வீடமைப்பிற்கு நாற்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

**முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்**

நீர்வேலி,

யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத்திட்ட கடனுதவிக்கென நாற்பது மில்லியன் ரூபா நிதியை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார அமைச்சினால் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் அதிகமாக வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்த காரணத்தினாலும் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 60 மில்லியன் ரூபா நிதி போதாமையினாலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்திஅதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளரின் வேண்டுகோளுக்கிணங்க 40 மில்லியன் ரூபா நிதி மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வீட்டுத்திட்டத்தில் புதிய வீடு அமைக்க விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு 5 இலட்சம் ரூபா கடனுதவி வழங்கப்படவுள்ளது.

முன்னிரிமை அடிப்படையிலேயே இக்கடனுதவி வழங்கப்படும். இவ்வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிவில் பாதுகாப்புக்குழு கலந்துரையாடல்

நாவாந்துறை,

யாழ்ப்பாண சிவில் பாதுகாப்பு தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி (திங்கட்கிழமை) யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் நடைபெற்று வரும் குற்றச்செயல்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்த சிவில் பாதுகாப்பு குழுமாநாட்டில் யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தமிழக மீனவர்களை உடனே விடுதலை செய்யுமாறு இலங்கை அரசிடம் எஸ்.எம். கிருஷ்ணா வலியுறுத்தல்

புதுடில்லி,

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்கள் 23 பேரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இலங்கை அரசை இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கச்சதீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 23 பேரை, அவர்களுடைய படகுகளுடன் இலங்கை கடற்படை கைது செய்து கொண்டு சென்றது. இதனைத்தொடர்ந்து அவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதுதொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கலைஞர், பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ், மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்ததுடன், பிரதமர் மன்மோகன் சிங் இவ்விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார்.

# நாகபாம்பு தீண்டிய பெண் வைத்தியசாலையில் அனுமதி

(ரொக்ஷன்)

நாகபாம்பு தீண்டிய பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒரு பிள்ளையின் தாயான சிவசக்தி (வயது38) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மேலும், இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது;

ஆனைக்கோட்டை காக்கைதீவுப் பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் மேற்படி பெண்ணின் வீட்டிலுள்ள தென்னை மரத்தடியில் மீன்பிடி வலையை விரித்து உலர்த்தியுள்ளார். குறித்த பெண் மீண்டும் அவ்வலையை எடுப்பதற்காகச் சென்றிருந்த சமயம் வலையில் சுருண்டிருந்த நாகபாம்பு பெண்ணின் கையில் தீண்டியுள்ளது. மயக்கமுற்ற பெண்ணை அவரின் உறவினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்றுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இவருக்கு நாகபாம்பு தீண்டியுள்ளது என தெரிவித்த வைத்தியர்கள் மேலதிக சிகிச்சையை மேற்கொண்டதால் தற்போது இவர் ஆபத்துக் கட்டத்தை தாண்டிய நிலையில் வைத்தியசாலையில் உள்ளார்.

# கஞ்சா வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது

நீர்வேலி,

யாழ். மாதகல் பகுதியில் இரண்டரைக் கிலோ கஞ்சா வைத்திருந்த இருவரை இளவாலைப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை, மாலை 6 மணிக்கு மாதகலில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த இரு நபர்களும் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்து இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுன்றது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குடிநீருக்கு தட்டுப்பாடு

நாவாந்துறை,

யாழ்.போதனா வைத்தியசாலையில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். திருநெல்வேலியில் பிரதான நீர் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதினால் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வரை குடிநீர் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையினரிடம் இது தொடர்பாக முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் திருத்த வேலைகளை நடந்துகொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

**அதிபர்...**(தொடர்ச்சி)

ஈடுபடுவதில்லை என சுட்டிக்காட்டுகின்ற மாணவிகளின் பெற்றோர் அதிபர் சர்ச்சைக்கு விரைவாகத் தீர்வுகண்டு ஒரு அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இப்பாடசாலையை மீண்டும் இயங்கச் செய்ய முன்வரவேண்டும் என வேண்டுகோள்விடுக்கின்றனர்.

மேலும் கற்பித்தலில் குறைகூறுகின்ற சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு பாடசாலையை மாற்றுவதற்கான விடுகைப்பத்திரங்களையும் பெற்றுவருகின்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் சர்ச்சை இன்னமும் இழுபறி நிலையிலேயேதான் உள்ளது. இக் கல்லூரியின் அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையின் பின் பொதுச் சேவைகள் ஆணைக்குழு வேணுகா சண்முகரட்ணத்தை அதிபராக நியமித்துள்ளது. ஆனால், அவரிடம் இக்கல்லூரியின் அதிபர் பொறுப்புகளைக் கையளிக்காமல் தற்போதைய பதில் அதிபராக கடமையற்றி வரும் ராஜினி முத்துக்குமாரன் மறுத்து வருகின்றார். இந்த நியமனத்தில் தனக்கு திருப்தியில்லையெனத் தெரிவித்த அவர் பொறுப்புக்களைப் புதிய அதிபரிடம் ஒப்படைக்க மறுத்து வருகின்றார்.

இருப்பினும் வேணுகா சண்முகரத்தினம் தனது பதிவியை பொறுப்பேற்று அதிபர் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே உள்ள பிரதி அதிபர் அலுவலகத்தில் இருக்கிறார். ஆனால் அவருக்கு அதிபர் அறையோ, பணிகளோ நேற்றுவரை கையளிக்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பெக்ஸ் மூலம் அனுப்பப்பட்ட தகவலின் அடிப்படையில் இருவரும் கல்வி அமைச்சுக்கு அவசரமாக அழைக்கப்பட்டனர். இந்த அழைப்பிற்கமைய கொழும்பு சென்ற இருவரும் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் ஆகியோரைத் தனித்தனியே சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் கருத்துத்தெரிவித்த வேணுகா சண்முகரட்ணம் தற்போதைய கல்லூரியின் நிலையை உணர்ந்த கல்வி அமைச்சின் செயலாளரும் மேலதிக செயலாளரும் என்னையே கடமையாற்றுமாறு பணித்துள்ளனர் என்றார். இக்கல்லூரியின் அதிபர் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ராஜினி முத்துக்குமாரனுடன் தொடர்பை ஏற்படுத்தும்போது அவர் தெரிவித்ததாவது;

நான் எந்தவொரு பத்திரிகையாளரையும் நம்பவில்லை. ஏன் நீங்கள் என்னைப் பார்க்க வருகிறீர்கள். நீங்கள் பேசாமல் இருங்கள். தானாகவே நல்லது நடக்கும். கல்வி அமைச்சர் எனக்குத் தனிப்பட்ட விதமாகச் சொன்னது நான் யாரிடமும் சொல்லவேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்தார்.

இது இப்படியிருக்கையில் புத்தூரைச் சேர்ந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவி ஒருவர் இக்கல்லூரியில் தரம் 6இல் இருந்து கற்கையைத் தொடர்வதற்காக அனுமதித்திருந்த வேளை ஒழுங்காக கணித பாடம் நடைபெறாதால் காரணத்தினால் அப்பிள்ளையின் பெற்றோர் பிள்ளையை வேறு பாடசாலைக்கு சேர்ப்பதற்காக விடுவிப்பு பத்திரம் பெற்றுச் சென்றுள்ளனர்.

**கடத்தல்...**(தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்திற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் உட்பட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

உப்புவெளி பிரதேசத்தில் வைத்து புதன்கிழமை காலை மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே திருகோணமலை மாவட்ட நீதிவான் யூ.எல்.ஏ.அஸ்ஹார் மேற்படி சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

**மீள்குடியேறி...**(தொடர்ச்சி)

முன்தினம் புதன்கிழமை அப்பகுதி மக்களிடம் உப தவிசாளர் சென்று மக்களின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தபோது இதனைத் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பாக அவர் யாழ் ஓசைக்குத் தெரிவிக்கையில்;

கடந்த மார்ச் மாதம் தமது சொந்தப் பகுதியில் சுமார் 10 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் பல அசௌகரியங்களை சந்தித்த வண்ணம் உள்ளனர். குறிப்பாக இப்பகுதி பற்றைக் காடுகள் போல் அமைந்துள்ளதால் வெப்பத்தினால் பல அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.

10 குடும்பங்கள் குடியமர்ந்துள்ள நிலையில் 7 குடும்பங்களுக்கு தற்காலிக வீடும் மலசல கூடமும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் காணப்படும் கிணறுகள் பூரணமாக சுத்தப்படுத்தப்படாமையினால் அந்நீரை உபயோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

வலி.வடக்குப் பிரதேச சபையால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் கடந்த 4 நாட்களாக இந் நீர்விநியோகம் தடைப்பட்டுள்ளது.இம் மக்களின் பிரதான தொழிலாக கமம் மற்றும் கூலித் தொழில்கள் அமைந்துள்ளபோதும் கமத்தொழிலைச் செய்வதற்கு உபகரணங்கள் இன்மையால் இதனைச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

வீட்டுத்தோட்டத்திற்கென பழம் மற்றும் கன்றுகள் வழங்கப்பட்டபோதும் இதனை நாட்டி பயன்படுத்துவதற்கு நீர் மற்றும் உபகரணங்கள் இன்மையால் பராமரிக்க முடியாதுள்ளது.

மீள்குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது எமக்கான தகவலாக உள்ளது. வசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகள் இங்கு தோன்றவில்லை. அடுத்துவரும் காலம் மழை காலம் என்பதால் பல அசாதாரண நிலை, சுகாதார தொற்றுகள், பூச்சிபூரான் தாக்குதல்களுக்கு ஆளாக நேரிடும். எமது பகுதியில் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றி எமக்கு சுதந்திரமாக வாழ உதவிகளை வழங்கவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

**கர்ப்பவதியாகிய...**(தொடர்ச்சி)

இச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது

தெல்லிப்பழை, சோடாக் கொம்பனித் தெருவுக்கு அருகாமையில் காளிகோயில் வீதியில் வசிக்கும் குறித்த பெண்ணை 5 மாதங்களுக்கு முன்னர் அவருடைய மாமனார் கற்பழித்துள்ளார். 5 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் குறித்த பெண் 5 மாத கர்ப்பவதியாகிவுள்ளார். இதனை அறிந்த மாமனார் தனக்கு களங்கம் ஏற்படும் எனக் கருதி அந்த மனநலம் குன்றிய பெண்ணை திட்டமிட்டு கிணற்றில் தள்ளிக் கொலை செய்ய முயற்சித்தவேளை பெண்ணின் தாயாராலும் உறவினர்களாலும் குறித்த பெண் காப்பாற்றப்பட்டுள்ளார். ஆனால், பெண்ணினுடைய மாமனார் தலைமறைவாகிவிட்டார்.

இந்நிலையில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் இவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸார் பெண்ணின் மாமனாரைத் தேடி வருகின்றனர். தற்பொழுது அப்பெண் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

**வவுனியா...**(தொடர்ச்சி)

பிரபல சிகை அலங்கார சிகிச்சை நிலையமொன்றின் உரிமையாளரான கேதாரலிங்கம் விசாகினி நேற்று வவுனியா கோவில் குளம் பகுதியில் உள்ள ஹோட்டல் அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து பிரேத பரிசோதனையினை மேற்கொண்டிருந்த மருத்துவ நிபுணரின் மருத்துவ அறிக்கையின் பிரகாரம் தூக்கில் தொங்கியதனால் ஏற்பட்ட மரணம் எனவும் இது தற்கொலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவரது மரணச் சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வேப்பங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மன்னார்...**(தொடர்ச்சி)

நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் உள்ளிட்ட ஏழு சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த பின்னர், நேற்று முற்பகல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் உறவினர்களுக்கு அல்லது நண்பர்களுக்கு ஏதேனும் விதத்தில் அழுத்தம் கொடுக்கப்படுமாயின், சம்பந்தப்பட்ட அமைச்சர் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என இந்த உத்தரவைப் பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.எல்.ரஞ்சித்த சில்வா குறிப்பிட்டார்.

மனுதாரர்கள் ஜனநாயகம் மற்றும் நீதிமன்ற சுயாதீன தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சட்டத்தரணிகள் என்ற ரீதியில மன்னார் சம்பவத்தைக் கண்டிப்பதாகவும் ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தில் கூறினார்.

அமைச்சரான ரிஷாட் பதியுதீன் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக தண்டிக்கப்பட வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கும் மனுவொன்றை மன்னார் சட்டத்தரணிகள் சங்கம், காலி சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இம் மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். நீதிமன்றத்தை அவமதித்தார் என அவருக்கு தண்டனை வழங்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் பணிக்க வேண்டுமென மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக அவரைத் தண்டிக்க வேண்டுமெனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இல. பீ 396/2010 வழக்கு தொடர்பாக மன்னார் நீதிவான் கடந்த ஜூலை 16ஆம் திகதி விடுத்த ஆணையை மாற்றுமாறு ஜூலை 17ஆம் திகதி பிரதிவாதி நீதிவானுக்கு தொலைபேசி மூலம் கூறியுள்ளார். அத்துடன், ஜூலை 18ஆம் திகதி தனியார் ஒருவரின் தொலைபேசியிலிருந்தும் நீதிவானுக்கு இன்னொரு அழைப்பு வந்துள்ளது.

பிரதிவாதி, ஜூலை 18இல் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரைச் சந்தித்து மன்னார் நீதிவானை உடனடியாக இடமாற்றம் செய்யும்படியும் கேட்டுள்ளார். இதற்கு முன்னர் பிரதிவாதி, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

இவை எல்லாம் நீதித்துறையினதும் நீதிமன்றங்களினதும் முறையான செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு என மனுதாரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

**செங்கம்பளம்...**(தொடர்ச்சி)

திரும்பும் போது செங்கம்பளம் விரிக்கமுடியாது என்று அமைச்சரவைப்பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.


ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், சட்டவிரோதமாக நாடு கடந்துசென்ற அகதிகள் நாட்டுக்கு திரும்பும்போது விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். சட்டரீதியில் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

சட்டரீதியாக வெளிநாடுகளுக்கு சென்று அதிகளாக அந்தஸ்து கோருவோரும், சட்டவிரோதமான முறையில் அகதிகளாக செல்வோர் என இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். அவ்வாறான அகதிகள் நாட்டுக்கு திரும்பும் போது செங்கம்பளம் விரித்து வரவேற்கமுடியாது. நாட்டின் சட்டத்தின் பிரகாரம் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றார்.




# அப்பெண்டிசிட்டிஸ் நோயும் குணப்படுத்தும் வழிமுறைகளும்




**தொப்புளைச் சுற்றி வலிக்கும். அதைத்தொடர்ந்து, வலது கீழ்ப்பகுதியில் வலி தொடரும். இந்த அறிகுறியை தெரிந்து கொண்டால், மருத்துவரை நாட வேண்டும்...**

"குழந்தைகளுக்கு" அப்பெண்டிசிட்டிஸ்" வந்தால் மிகவும் கவனம். ஏனெனில் பெரியவர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கும் கூட குடல்அழற்சி வலி எனப்படும், "அப்பெண்டிசிட்டிஸ்" கோளாறு வரும். இதன் அறிகுறி தெரிந்தவுடன், மருத்துவரிடம் காட்டி, சிகிச்சை செய்வதுதான் சரியான முடிவு.

இந்த விடயத்தில் கவனக்குறைவு கூடாது. மிகவும் அவதானத்துடன் இருந்தால் பெரும் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். அடிவயிற்றின் எல்லாப் பகுதிகளையும் தொற்றுக்கிருமிகள் தாக்கி, வயிறானது பாதிப்படைந்து வலி ஏற்பட்டு வயிற்றுக் கோளாறு முற்றிவிடும்.

**அப்பெண்டிசிட்டிஸ் என்றால்.?**

குடல் அழற்சியையே அப்பெண்டிசிட்டிஸ் என்று அழைப்பர். அதாவது சிறு மற்றும் பெருங்குடலில் தேவையில்லாமல் வளரும் சதைப்பகுதி. சிறிய விரல்போல நீட்டிக்கொண்டிருக்கும். அதனால் பல பிரச்சினைகள் ஏற்படும்.

**எந்த வயதில் வரும்?**

சிறிய குழந்தைகளுக்கு "அப்பெண்டிசிட்டிஸ்" வலி வந்தால், அதற்கான அறிகுறி வெளிப்படையாக தெரியும். அது தெரிந்தால், உடனே கவனித்து உடனடி சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு வயது குழந்தைக்குக்கூட இந்தக் கோளாறு ஏற்படும்.

**என்ன காரணம்?**

இந்தக் கோளாறு ஏற்பட என்ன காரணம் என்பது இதுவரை மருத்துவ ரீதியாக கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், கழிவுகள் மூலம் ஏற்படுகிறது என்று மட்டும் சொல்லப்படுகிறது. அது தான், குடலில் சதைப்பற்றை வளர்க்கின்றது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**அறிகுறி என்ன?**

இரண்டு வயதுக்கு கீழே உள்ள குழந்தைகளுக்கு வராது. அதற்கு மேல் பலருக்கும் வர வாய்ப்புள்ளது. வயிற்றில் வலி இருக்கும். அதுவும், தொப்புளைச் சுற்றி வலிக்கும். அதைத்தொடர்ந்து, வலது கீழ்ப்பகுதியில் வலி தொடரும். இந்த அறிகுறியை தெரிந்து கொண்டால், மருத்துவரை நாட வேண்டும்.

**வேறு அறிகுறிகள்:**

வலியுடன் அதிகரித்து வாந்தி வரும் காய்ச்சல் இருக்கும், பசியெடுப்பது குறையும். அப்படியே சாப்பிட்டாலும் மலச்சிக்கல் ஏற்படும் நீர்த்து போகும். படுக்கையை விட்டு குழந்தை எழுந்திரு க்காது.

குழந்தை நடக்கும் போதே, சாதுவாகத்தான் நடக்கும். அந்த அளவுக்கு வயிற்றில் வலி இருக்கும். மருத்துவரிடம் காட்டாமல், வயிற்று வலிக்கு மாத்திரையோ, ஏனைய பானங்களை, குழந்தைகளுக்கு சாப்பிடக் கொடுக்கக் கூடாது.


**பரிசோதனை அவசியமா?**

குடல் அழற்சி நோய்க்கான அறிகுறியை உறுதி செய்ய, பரிசோதனை எதுவும் இல்லை. இரத்த, சிறுநீர் பரிசோதனை தான் செய்யப்படுகிறது. அதை வைத்துத்தான் "அப்பெண்டிசிட்டிஸ்" உறுதி செய்யப்படுகிறது. சில சமயம், பரிசோத னைகளில் கூட தவறாகக் காண்பிக்கலாம். ஆனால் மருத்துவர் சந்தேகப்பட்டால், அதற்கு சிகிச்சை செய்வது நல்லது.

**சிகிச்சை என்ன...?**

குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது என்பது கடைநிலையில் வைக்கப்படும். குடல் அழற்சிக்கு காரணமான சதைப்பற்றை நீக்கிவிட மருந்து, மாத்திரை மூலம் சிகிச்சை செய்ய முயற்சி செய்வார்கள் மருத்துவர்கள். வேறுவழியில்லாமல் போனால் தான் அறுவைச் சிகிச்சை பற்றி முடிவு செய்வர்.





**அறுவைச் சிகிச்சை தேவையா?**

அறுவைச் சிகிச்சை செய்துதான், "அப்பெண்டிசிட்டிஸ்" கோளாறை நீக்க வேண்டும் என்று மருத்துவர்கள் முடிவு செய்யும் போது, அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பர்.

**இரண்டு வகை:**

குடல் அழற்சி கோளாறை நீக்க, குடலில் நீண்டிருக்கும் சதையை நீக்க, இரண்டு வகையில் அறுவை சிகிச்சை செய்யப்படும். ஒன்று, திறந்து செயும் அறுவை சிகிச்சை. இரண்டாவது, லேப்ராஸ் கோபி முறையில் நடத்தப்படும். முதல் வகை அறுவைச்சிகிச்சைதான் பெரியவர்களுக்கு செயப்படுகிறது. லேப்ராஸ் கோபி முறையானது, குழந்தைகளுக்கு பெரிய அளவில் பலன் தராது. அதனால், முதல் வகை அறுவைச் சிகிச்சைதான் சரியானது.

**தடுக்க வழியுண்டா?**

"அப்பெண்டிசிட்டிஸ்" கோளாறை தடுக்க சரியான முறைகள் இருப்பதாக தெரியவி ல்லை. உணவுப்பழக்கத்தை வைத்துத்தான் ஒருவருக்கு இந்த கோளாறு வரும், வராது என்று மருத்துவர்கள் சொல்வார்கள்.அந்த வகையில், நார்ச்சத்து உள்ள உணவுகளை சாப்பிடும் குழந்தைகளுக்கு இந்தப் பாதிப்பு வரவே வராது.

## கோட்சேயாக பிரிதிவிராஜ்...



மகாத்மா காந்தியை கோட்சே சுட்டுக் கொன்ற வேடத்தில் நடிக்கிறார் பிருத்விராஜ். தேசத்தந்தை எனப் போற்றப்படும் காந்தியின் வாழ்க்கை வரலாறு மலையாளத்தில் படமாகிறது. இந்தப் படத்தை தமிழிலும் வெளியிட முடிவு செய்துள்ளனர். இதில் கோட்சே வேடத்தில் பிருதிவிராஜ் நடிக்கிறார். ஷாஜி கைலாஷ் இயக்குகிறார். பிருத்விராஜ் வைத்து ஷாஜி கைலாஸ் தற்போது சிம்ஹாசனம் படத்தை இயக்கி வருகிறார். இப்படம் முடிந்ததும் கோட்சே படத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார். கோட்சேயின் வாழ்க்கை சம்பவங்கள் இதில் காட்சிப்படுத்தப்படுகின்றன. அவனது குடும்ப சூழல், காந்தியை கொல்ல வகுத்த திட்டங்கள், அதன் அரசியல் பின்னணி போன்றவை படமாக்கப்படுமாம். இதுகுறித்து ஷாஜி கைலாஸ் கூறும்போது, "கோட்சே படம் உணர்வு பூர்வமான திரைக் கதையில் உருவாகிறது. காந்தியை கொல்வதற்கு முந்தைய நாள் கோட்சேயின் மனநிலையும் உணர்வு போராட்டங்களும் எப்படி இருந்தன என்பதை திரைக்கு கொண்டு வருகிறோம். பிரித்விராஜ் இந்த வேடத்தில் சிறப்பாக நடிப்பார் என்றார்.

## புது நாயகிகள் மீது கோபத்தில் மீராஜஸ்மின்...

புது நடிகைகளின் வரவால் தனது மார்க்கெட் போய் விட்டதாக மீரா ஜஸ்மின் புலம்ப ஆரம்பித்துள்ளாராம்.

தமிழ், மலையாளத்தில் முன்னணி நடிகையாக இருந்தவர் மீரா ஜஸ்மின். அவரது நடிப்புத் திறமைக்கு இணையானது அவர் கிளப்பும் பிரச்சினைகளும்.

மலையாளத்தில் மீரா ஜஸ்மின் என்றாலே ட்ரபிள் மேக்கர் என்ற பெயர் உண்டு. கூடவே அவரது காதல் பிரச்சினைகளும் சேர்ந்து கொள்ள, புதுப்படங்களுக்கு அவரை யாரும் ஒப்பந்தம் செய்யவில்லை. தமிழில் அவர் கடைசியாக நடித்தவை மம்மட்டியான், ஆதி நாராயணா போன்றவைதான். இப்போது உருவாகும் பெரும்பாலான படங்களில் புது நடிகைகள்தான் நடித்து வருகின்றனர். மேலும் ரீமா கல்லிங்கல், காவ்யா மாதவன், நவ்யா நாயர் போன்றவர்களும் களத்தில் கடும் போட்டியைத் தர, அதை சமாளிக்க முடியாமல் தடுமாறிப் போயுள்ளாராம் மீரா.

இதுகுறித்து அவர் கூறுகையில், திறமைக்கு மதிப்பு குறைந்துவிட்டது. அனுபவசாலிகளை நல்ல கதாபாத்திரங்களில் நடிக்கக் கூப்பிடுவதில்லை என்றார்...



## விக்ரமுடன் இணைகிறார் தீபிகா படுகோன்...

ஷங்கரின் இயக்கத்தில் உருவாகும் ஐ படத்தில் நாளுக்கு நாள் நட்சத்திரங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது.

இப்படத்தில் விக்ரம், எமி ஜாக்சன், சந்தானம், சுரேஷ் கோபி என பெரிய நட்சத்திர பட்டாளமே நடிக்க உள்ளது. இது தவிர பவர் சீனிவாசனும் ஒரு வேடத்தில் நடிக்கிறாராம். இந்நிலையில் ஏ.ஆர்.ரஹ்மான் கொடுத்த முதல் பாடலை விக்ரம், எமி ஜாக்சனை வைத்து ஏ.வி.எம்மில் படமாக்கி விட்ட ஷங்கர், இப்போது இன்னொரு முக்கிய பெண் பாத்திரத்தை உருவாக்கியுள்ளாராம். படத்தின் பிற்பகுதியில் வரும் இவ்வேடத்திற்கு பொலிவுட் முன்னணி நாயகி தீபிகா படுகோனிடம் பேச்சு நடத்தி வெற்றியும் பெற்றுவிட்டா ராம். தீபிகா படுகோன் தற் போது தமிழில் ரஜினியின் கோச்சடையா னில் நடிக்கிறார். சில ஹிந்திப் படங்கள் வேறு கைவச மிருந்தாலும், கால்ஷீட்டை சில மாதங்கள் கழித்து தந்தால் போதும் என ஷங்கர் கூறியதால் உடனே சரி என்றாராம் தீபிகா...



## வதந்திகளை பரப்பாதீர்கள்



டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் என் பெயரை பயன்படுத்தி மோசடி செய்கிறார்கள் என்று அசின் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது, என்னை பற்றி பெருமையடித்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. அதுமட்டுமில்லாமல் மற்றவர்களைப் போல எனது தனிப்பட்ட விடயங்களை வெளிப்படுத்திக் கொள்வதையும் விரும்பவில்லை.

டுவிட்டர், பேஸ்புக்கில் இணைந்திருப்பதால் பலருக்கு ஆதாயம் கிடைக்கலாம். ஆனால் எனக்கு அதில் உடன்பாடில்லை. நான் அமைதியாக இருக்க நினைப்பவள். அதனால் என் வாழ்வில் ஒவ்வொரு நொடியும் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்பதை உடனுக்குடன் வலையேற்றிக் கொண்டிருக்க முடியாது.

அதனால் சமூக வலைத்தளங்களில் நான் இணையவில்லை. ஆனால், எனது பெயரில் பல கணக்குகள் டுவிட்டரில் காணப்படுகிறது. எனது படங்களை வெளியிட்டு நான் செல்கிற விழாக்களின் படங்கள் இருக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

## திரிஷா வீட்டு மாடிப்படிகள்...



நடிகை திரிஷா, தன் வீட்டில் விலையுயர்ந்த மாபிள் கற்களை பதித்து படிக்கட்டுகளை உருவாக்கியுள்ளார்.

திரையுலக நடிகர்கள் நடிகைகள் தங்களுடைய வீடுகளை அலங்கரிப்பதில் தீவிரமாக செயற்படுவார்கள். இந்நிலையில் நடிகை திரிஷா, தன் வீட்டை விலையுயர்ந்த மார்பிள் கற்களால் அலங்கரித்துள்ளார். தற்போது இந்த வீட்டைப் பற்றித் தான் கொலிவுட்டில் ஒரே பேச்சாக இருக்கிறது. வீட்டிற்குள் திரிஷாவின் அறைக்கு செல்ல 13 படிக்கட்டுகள் இருக்கின்றன. அப்படிக்கட்டுகள் அனைத்துமே விலையுர்ந்த மாபிளில் செய்யப்பட்டது. அதாவது, ஒவ்வொரு மாபிள் படிக்கட்டும் ரூ. 2 இலட்சமாம்.

அவரது வீட்டிற்கு வரும் விருந்தாளிகள் எல்லாம் படிக்கட்டைப் பார்த்தே பிரமித்துப் போகிறார்களாம்.

இது தவிர, நடிகை திரிஷா வீட்டில் பிரமாண்ட நீச்சல் குளம் உள்ளது. இது போன்ற நீச்சல் குளம் மற்ற எந்த தென்னிந்திய நடிகைகள் வீட்டிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



சில்லாலை, புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று நடைபெற்றபோது, திருவிழா திருப்பலியை அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் தலைமையில் ஒப்புக்கொடுப்பதையும் காணிக்கை பவனி நடைபெறுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்- எம். நியூட்டன்)

# உள்ளூராட்சி சபைகளின் நடைமுறைகளில் வெளிப்படுதன்மை இருக்கவேண்டும்

## பணிப்பாளர் கிருஷ்ணானந்தன்

(யாழ்.மத்தி நிருபர்)

உள்ளூராட்சி சபைகளினால் எடுக்கப்படும் தீர்மானங்கள், திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து வெளிப்படு தன்மை இருக்கவேண்டும் என வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் கிருஷ்ணானந்தன் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபை அனைத்து அலுவலர்களுக்கும் சபை உறுப்பினர்களுக்குமான நல்லாட்சி தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ்.திறந்த பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தத்துவங்கள் ஊடாக மக்களுக்கான பயனுள்ள சேவைகள் கிடைக்கப்பெறுவதற்கான ஒவ்வொரு ஒழுங்குகளையும் உறுதிப்படுத்தவேண்டும். உள்ளூராட்சி சபையானது மக்களை ஆளுகின்ற நிறுவனம்.

எனவே, பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத் தன்மை,வகைகூறும் தன்மை, சமத்துவத்துடன் அனைவரையும் உள்வாங்கும் தன்மை, வினைத்திறன், சட்ட ஒழுங்கு, பங்குபற்றல், ஒருமித்த இணக்கப்பபடான தன்மையுடன் உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர் செயற்படவேண்டும்.

இதற்கு இந்தப் பயிற்சி உதவும். முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் முதற்கட்டமாக குடாநாட்டில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் இதனை அறிமுகப்படுத்தும் என்றார்.

# சண்டிலிப்பாய் விளையாட்டு மைதானத்தில் மாலையில் மதுப்பிரியர்கள் களியாட்டம்

உடுவில்,

சண்டிலிப்பாய், தோப்பு, விளையாட்டு மைதானம் மாலைவேளைகளில் மதுப் பாவனையாளர்களின் களியாட்ட இடமாக மாறி வருவதாக அந்தப் பகுதி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விளையாட்டு மைதானம் என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்திற்கான உடல், உள ஆரோக்கியத்தைப் பேண வேண்டும் என்பதற்காக உருவாக் கப்பட்டது. ஆனால், இந்த விளையாட்டு மைதானத்தில் இளைஞர்கள் தங்கியிருந்து மாலை வேளைகளில் மது அருந்தி களியாட்டம் நடத்தி வருகின்றனர். எனவே, மாலையில் பொழுதுபோக்கு நேரத்தில் இடம் பெறும் சம்பவங்களை உரியவர்கள் கண்காணித்து தடைசெய்ய முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கரைச்சி பிரதேச மக்களுக்கு நெல்சிப் திட்டத்தின் கீழ் நிதியுதவி

யாழ்ப்பாணம்,

கரைச்சி பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 60 மில்லியன் ரூபா செலவில் நான்கு வீதிகள் உட்பட பல அபிவிருத்தி வேலைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த வேலைத்திட்டத்தில் எந்தவிதமான முறைகேடுகளும் இடம்பெறாமல் இருப்பதற்காக கண்காணிப்புக் குழுக்களும் நியமிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வேலைத் திட்டத்திற்கும் ஆண், பெண் இருபாலரும் சேர்ந்த பத்துப் பேர் கொண்ட உறுப்பினர்கள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முடியும் வரை இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் பின்வரும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

1.25 கி.மீற்றர் நீளமான பரந்தன் பாடசாலை வீதி ரூபா 22 மில்லியன் செலவிலும், ஒரு கி.மீற்றர் நீளமான கனகாம்பிகைக் குளம் சேர்வின் வீதி ரூபா 10 மில்லியன் செலவிலும் ஒரு கி.மீற்றர் நீளமான முரசுமோட்டை மயான வீதி ரூபா 10 மில்லியன் செலவிலும், 1.25 கி.மீற்றர் நீளமான உருத்திரபுரம் மேற்கு குறுக்கு வீதி ரூபா 11 மில்லியன் செலவிலும் தார் வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

இரணைமடு சந்தை ரூபா 5 மில்லியன் செலவில் புதிதாக அமைக்கப்பட்வுள்ளது. பரந்தனிலுள்ள கோரக்கன்கட்டு மயானம் ரூபா 2 மில்லியன் செலவிலும் பன்னங்கண்டி மயானம் ஒரு மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளது.

இப்பிரதேசத்தில் 2010ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு

உடுவில்,

முல்லைத்தீவு பிரதேச சபை வளாகத்திலுள்ள கைவிடப்பட்ட கிணற்றிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆயுதங்கள் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு பிரதேச சபையினர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

விமான எதிர்ப்புக் குண்டுகள் 3, துப்பாக்கி ரவைகள் 560 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# அச்சுவேலி பஸ் நிலையம் 50 இலட்சம் ரூபாவில் புனரமைப்பு

அச்சுவேலி,

அச்சுவேலி பஸ் நிலையம் 50 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதால் இந்த வருடம் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அச்சுவேலி பஸ் நிலையம் கடந்த 50 வருடத்துக்கு மேலாக எந்தவிதமான அபிவிருத்திக்கும் உள்ளாக்கப்படாமல் இருந்து வருகின்றது. புனரமைக்கப்படவிருக்கும் பஸ் நிலையத்தில் நகர கட்டுமானத்திற்கு ஏற்றவகையில் மாடிக்கட்டடத்தில் பஸ் நிலையத்திற்கான அலுவலகம் மற்றும் பயணிகள் தரித்துநின்று பயணம் செய்வதற்கான இருக்கைகளை உள்ளடக்கிய பஸ் தரிப்பிடம் என்பனவும் அமைக்கப்படவுள்ளன.

மேலும், சேதமடைந்து பெரும் குழிகளாகக் காணப்படும் நிலப்பகுதி செப்பனிடப்பட்டு மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளது.

அச்சுவேலி பஸ் நிலைய புனரமைப்புக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதால் கட்டுமானப்பணிகள் இந்த வருடம் முடிவதற்கு முன்னர் ஆரம்பமாக உள்ளது.

# தொலைத்தொடர்பு இயக்குநர்கள் நியமனம்

சாவகச்சேரி,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மூன்று தொலைத்தொடர்பு இயக்குநர்கள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்டு கடமைகளை கடந்த வாரம் பொறுப்பேற்றுள்ளனர்.

வைத்தியசாலை நிர்வாக அலகுப் பிரிவில் வைத்தியசாலை அபிவிருத்திப் பிரிவினரால் கண்ணாடியிலான அறை அமைத்துக் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வட மாகாண மீன் உற்பத்தியை அதிகரிக்குமாறு கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது

## பிரதிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி

நாவாந்துறை,

வட மாகாணத்தின் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ரீதியில் மேற்கொள்ளுமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன அறிவித்துள்ளதாக யாழ். பிராந்திய நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் வட மாகாணம் மீன் உற்பத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கு ஏற்ற வகையில் 15 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களிடையே அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு முன் னர் வட மாகாண மீனவர்கள் நாட்டின் 43 சதவீத மீன் உற்பத்தியினை மேற்கொண் டார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ங்களின் மீன்பிடித்துறையினை மேம்படு த்துவதற்காக 50 கோடி ரூபா நிதியினை செலவிட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சின் புள்ளி விபரங்கள் அடங்கிய கோவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள மீன்பிடித் துறை முகப் பகுதிகளை ஆழமாக்குவத ற்கான விசேட தொழில்நுட்பத்துடனான கப்பல் ஒன்றை நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது என அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அரியாலை தினத்தையொட்டி போட்டிகள்

புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் அரியாலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் அரியாலைப் பிரதேசத்தில் தொடர்ந்து வசிப்பவர்களும் தமக்கிடையேயுள்ள தொடர்புகளை வலுப்படுத்தி புரிந்துணர்வையும் நட்புறவையும் ஊர்ப்பற்றையும் வெளிக்கொணரும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாகவே அரியாலைதினம் கொண்டாடப்படுகின்றது.

முதன் முதலாக இடம்பெறும் இந்நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளாக காலை 7 மணிக்கு வட மாகாண ரீதியான ஆண், பெண் சைக்கிளோட்டம், மற்றும் ஆண்கள் வீதியோட்டம், மெய்வன்மைப் போட்டிகள், சங்கீதக் கதிரை, விநோத உடைப்போட்டி என்பன நடைபெறும்.

யாழ். தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் அரியாலை அணி உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள 16 அணிகள் பங்குபற்றும் தாச்சிப்போட்டி நேற்று (வியாழக்கிழமை) காலை 8.30 மணிக்கு திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இத்தினத்தையொட்டி மலர் வெளியீடும் புலம்பெயர்ந்து வாழும் மாணவி ஒருவரின் சங்கீத நிகழ்வு மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வணிகப் போட்டிகள்

சாவகச்சேரி,

தென்மராட்சி, கல்வி வலய மாணவர்களுக்கிடையிலான வணிக பாடப் போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களையும் தரம்-10, 11, 12, 13 ஆகிய மாணவர்களுக்கு வணிகம், கணக்கீட்டுக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# வலய ரீதியிலான பௌர்ணமி விழா

சாவகச்சேரி,

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வலய ரீதியாக நடத்தப்படும் பௌர்ணமி விழாவில் ஆடிப்பௌர்ணமி விழா இம்முறை தென்மராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதி (புதன்கிழமை) 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வு பதில் மாகாணக் கல்விப் பணிப்பளார் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் க.அருணாசலம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு அறிஞர் கௌரவிப்பும் தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,

வலி. தென்மேற்கு, பிரதேசத்தின் மானிப்பாய் கிராம சனசமூக நிலையங்களின் பொதுக்கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 2.30 மணிக்கு மானிப்பாய், கிராம உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கியமான விடயங்கள் ஆராயப்படவேண்டியிருப்பதால் நிலையத்தின் சார்பில் தலைவர், செயலாளர் உட்பட மூன்று உறுப்பினர்களைச் சமுகமளிக்குமாறு சமாசத்தின் செயலாளர் ச. ரொபின்சன் தெரிவித்துள்ளார்.



பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது, நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவ தலைவி உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். பிரேமகாந்தன் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்- நெல்லியடி நிருபர்)



யாழ். குருநகர் யாகப்பர் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது, யாகப்பரின் திருச்சொருபம் பக்தர்களால் எடுத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.
(படங்கள் : நாவாந்துறை நிருபர்)

# தீவகத்தின் பல பகுதிகளில் கடும் வரட்சி உதவுமாறு தேசிய நீர்வழங்கல் சபையிடம் வேண்டுகோள்

(யாழ்.மத்தி நிருபர்)

தீவகத்தின் பல பகுதிகளிலுள்ள நீர் நிலைகள், கிணறுகள் போன்றவை கடும் வரட்சியினால் வற்றியமையினால் தீவக மக்களுக்கான குடிதண்ணீரை வழங்கமுடியாதுள்ளது.

எனவே, யாழ்.தேசிய நீர்வழங்கல் சபையினர் மண்டைதீவு, சரவணை, புங்குடுதீவுப் பகுதி மக்களுக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கும் மேலதிக சேவையை உடன் செயற்படுத்த வேண்டுமென வேலணை பிரதேச சபை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சாட்டியிலுள்ள நன்னீர் கிணற்றினை பிரதேச சபையும் ஏனைய ஊர்காவற்றுறை பிரதேசசபை, படையினர், கடற்படையினர் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன. இதனால் நீர் ஊற்றுக்குறைந்து வரட்சி ஏற்படுகின்றது. எனவே, மக்களுக்குப் போதுமான குடிதண்ணீர் வழங்கமுடியாதுள்ளது.

அத்துடன் தற்போது வேலணையிலுள்ள பெரும்பாலான ஆலயங்களும் குடிதண்ணீருக்காக விண்ணப்பித்துள்ளன.

இதனால் தீவகப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் சேவையை வழங்க யாழ்.தேசிய நீர்வழங்கல் சபை தனது வளங்களையும்-வாகனங்களையும் பயன்படுத்தி நீர்வழங்க முன்வரவேண்டும்.

மிகக் கஷ்டப் பிரதேசமான மண்டைதீவு மக்களுக்கும் புங்குடுதீவு மக்களுக்கும் குடிதண்ணீர் சேவையை வழங்கி உதவ வேண்டும் எனவும் வேலணை பிரதேச சபை நிர்வாகம் கேட்டுள்ளது.

# தொண்டு நிறுவன உதவியுடனான மக்களின் வீடுகளுக்கு வடக்கின் வசந்தத்தின்கீழ் மின்சார இணைப்பு இல்லை

## வயாவிளான் - சுகந்திரபுரம் மக்கள் கவலை

(எம்.நியூட்டன்)

வலிகாமம் வடக்கு, வயாவிளான் சுகந்திரபுரம் பகுதி மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தினால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளபோதும் அவ்வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் வீதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டு கம்பிகள் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலையே தொடர்கிறது.

வயாவிளான் சுதந்திரபுரம் பகுதி மக்களுக்கு குடியேற்றத் திட்டம் ஒன்றினூடாக யூ.என்.டி.பி. (பிசிபிசர்) திட்டத்தின் கீழ் 2010 - 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் 92வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வீட்டுத் திட்டத்திற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டுள்ளபோதும் இதுவரையும் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

# தேர்தலுக்காக அசுரவேகத்தில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திகள் தற்போது ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன

## பூநகரி மக்களின் ஆதங்கம்

யாழ்ப்பாணம்,

பூநகரி பிரதேசத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு அசுர வேகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. இதனால் அரைகுறையான அபிவிருத்தி வேலைகளுடன் காட்சியளிக்கும் வீதிகளில் பயணம் செய்யமுடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த வருடம் ஜூலை மாதம் இடம்பெற்றது. பூநகரிப் பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் போட்டியிட்டன.

இத்தேர்தலை முன்னிட்டு பூநகரிப் பிரதேசத்திலுள்ள பல வீதிகளை அபிவிருத்தி செய்ய முன்வந்த அரசாங்கம் அவசர அவசரமாக வேலைகளை ஆரம்பித்தது. இந்த நிலையில் பூநகரிப் பிரதேச சபையின் அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நான்கு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து அசுர வேகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள் தற்பொழுது ஆமை வேகத்தில் இடம்பெறுகின்றது. வீதிகளில் பரவப்பட்டுள்ள கற்களினாலும் அரைகுறையுடன் காணப்படும் சீமெந்திலான வீதிகளினாலும் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

# கனகராயன் குளத்தில் ஆயுதங்கள் மீட்பு

உடுவில்,

கனகராயன்குளம் பகுதியில் புகையிரதப் பாதைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஒரு தொகுதி ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பற்றை ஒன்றினுள் இருந்தே இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிரனைட் லோஞ்சர்கள் -2 மற்றும் அதற்குரிய குண்டுகளுமே மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை எனத் தெரியருகிறது.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி விஸ்தரிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களை இணைப்பதற்காகவும்,

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், மருதனார்மடத்தின் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவிலின் ஒரு பகுதி, குளப்பிட்டி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெருப் பிரதேசம், கோம்பையன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு, மீனாட்சிபுரம், பாஷையூர், கொழும்புத்துறை, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, நெல்லண்டை, பருத்தித்துறை, புனிதநகர், கற்கோவளம், உபயகதிர்காமம், வல்லிபுரக்குறிச்சி, அம்பன், குடத்தனை, மணற்காடு, நாகர்கோவில் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், யாழ் பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், மருதனார்மடத்தின் ஒருபகுதி, இணுவில், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, நவாலி, ஆனைக்கோட்டை, கோண்டாவிலின் ஒருபகுதி, குளப்பிட்டி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெருப் பிரதேசம், கோம்பையன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு, மீனாட்சிபுரம், பாஷையூர், கொழும்புத்துறை, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, குஞ்சர்கடை ஒருபகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும், 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பண்டத்தரிப்பு, சில்லாலை, நிச்சாமம், விளான், இளவாலை, மாதகல், சாந்தை, வடலியடைப்பு, இடும்பன் பிரதேசம், தொல்புரம், சுழிபுரம், நாவற்குழி, தச்சன்தோப்பு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

# காணாமற்போன இரு சிலைகளை கிளி. பொலிஸார் மீட்டுள்ளனர்

உடுவில்,

கிளிநொச்சி முருகன் கோவிலிருந்து கடந்த மாதம் காணாமற்போனதாகக் கூறப்பட்ட சிலைகளில் இரண்டு சிலைகளை கிளிநொச்சிப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் வீதியிலுள்ள மதகின் கீழ் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த இரு சிலைகளையும் மீட்டுள்ளனர். ஏனைய சிலைகளைத் தேடும் பணிகளிலும் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

சிலைத் திருட்டுடன் தொடர்புடைய எவருமே இதுவரையும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கடை உடைத்து 1,37,000 ரூபா களவு

உடுவில்,

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், மணியகுளம் பகுதியில் உள்ள கடையை உடைத்து சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற கடை உரிமையாளர் மறுநாட் காலையில் வந்து பார்த்தபோது கடை உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வருடாந்த மஹோற்சவம்

வடமராட்சி,

வடமராட்சி, கொற்றாவத்தை அயிட்டிப்புலம், அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் 1ஆம் திகதி புதன்கிழமை கால 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறுவதுடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறும்.

# இலவச கல்விக் கருத்தரங்கு

இலங்கை வானொலி யாழ்.எஃப்.எம் சேவையினால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் இக்கருத்தரங்கில் 2012, 2013 உயர்தர வர்த்தகப் பிரிவின் கணக்கீடு பாடத்திற்கான விரிவுரைகள் நடைபெறவுள்ளன.

இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களை பாடசாலைச் சீருடையுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அறிவித்தல்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களின் விளையாட்டுப்போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களை நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு முன்பாக பாடசாலைச் சீருடையுடன் துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

# கேட்டியளே சங்கதி

'தேடி வரும் சீதேவியை காலால எட்டி உதைச்சாணாம்' என்ட கதையத்தான் பல நல்ல விசயங்களும் எட்டி உதைக்கப்படுது பாருங்கோ... 'எதிர்ப்பு' என்ட கொள்கையை மட்டுமே எப்பவும் எம்மோடு வைத்திருக்கும் நாம், அரசாங்கம் எதைக் கொண்டுவந்தாலும் கண்ணை மூடிக்கொண்டே புறக்கணிக்கத் தொடங்கி விடுகிறோம். அல்லது வேண்டாவெறுப்பாய் நடந்து கொள்கிறோம். ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கும் பயன்தரும் வகையில் வரும் நல்ல திட்டங்களைக்கூட ஆட்சி செய்வோரை பிடிக்கவில்லை என்ற ஒரு காரணத்துக்காக தட்டிக்கழிக்கழிக்க வெளிக்கிட்டு விடுவோம்.

இன்றைக்கு நாட்டில உள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் சத்துணவுச் சாப்பாட்டுத்திட்டம் கொண்டு வரப்பட்டிருக்குப் பாருங்கோ... வேறுபாடின்றி எல்லாப் பிரதேச பாடசாலைகளுக்குமே இந்த உணவுத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கு. மாணவர்களின் போஷாக்கை மேம்படுத்த அரசாங்கம் இத்திட்டத்தைக் கொண்டுவந்திருக்கு. பிள்ளைகளின் கலோரியின் அளவைக் கூட்டுவதற்கு ஏற்றாற்போல் பாலும் முட்டையும் கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கு பாருங்கோ...

இந்த போஷாக்கான நல்ல திட்டத்தை பொறுப்பெடுத்து நடைமுறைப்படுத்த யாழ்ப்பாணத்து பள்ளிக்கூட அதிபர்மார் பின்னடிக்கினமாம். பழைமைவாதக் கோட்பாடுகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் காரணம் காட்டி உந்தத்திட்டத்தை அமுல்படுத்துவதில் பஞ்சி காட்டி வருகினமாம். படிப்பிக்கிற வேலையைப் பாக்கிறதா இதைப் பாக்கிறதா எண்டு வாத்திமார் பலரும் இதற்கு மூடு விழா போட வெளிக்கிட்டிக்கினம். இத்தனைக்கும் இந்த வாத்திமார் ரீச்சர் அவங்கள் படிக்கிற காலத்தில விசுக்கோத்தும் பாலும் இலைக்கஞ்சியும் பள்ளிக்கூடத்தில குடிச்சு வளர்ந்தவர்கள் பாருங்கோ... அப்ப இருந்த வாத்திமாரும் உந்த வேலைத்திட்டத்தை நல்லபடியாத்தானே செய்தவையள். அப்ப அவர்களால செய்யமுடிந்ததை ஏன் இப்ப இவயளால செய்யமுடியுதில்லை.

இதுபோக சில பாடசாலை அதிபர்மார் பாடசாலையில் இருக்கும் பாரம்பரிய சமயக்கோட்பாடுகளை காரணம் காட்டி முட்டையைப் பாடசாலைக்குள் கொண்டு போகவே மறுக்கினமாம். அதிபர் ஒருவர் கேட்கிறார் அரசாங்கம் கொண்டுவந்ததுக்காக நாங்கள் எங்கட சமயப் பாரம்பரியங்களை கைவிடுகிறதோ என்டு... இப்படி பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள் போல் சமய சம்பிரதாயச் சடங்குகளை இறுக்கமாகக் கடைப்பிடித்தால் படிக்கும் மாணவர்களின் நலனை யார் கவனிப்பது? கல்வியோடு ஆரோக்கியமும் சேர்ந்து வளர்ந்தால்தான் மாணவனுக்கு அது ஒரு முழுமையான வளர்ச்சி. மூளை வேலை செய்ய உடல் ஆரோக்கியம் வேணும் பாருங்கோ. வாத்திமாரே... உங்களுக்கே தெரியும் பள்ளிக்கூடத்தில எத்தனை பிள்ளைகள் காலையிலேயே தலையைச் சுற்றி விழுதுகுகள் எண்டு. இதற்கு என்ன காரணம் என்டெல்லாம் நீங்கள் விசாரிப்பியளோ...? இல்லை. அநேகமாக இருக்காது. வெய்யிலுக்க நிண்ட களைப்பு எண்டு தண்ணியை தெளிச்சு எழுப்பி விட்டு விடுவியள். எத்தனை குஞ்சுகள் காலைச் சாப்பாடே சாப்பிடாமல் வருகுதுகள் என்டு தெரியுமோ...? வீட்டிலிருந்தால் பசியின் ஞாபகம் வரும். அதை மறக்க வேண்டும் என்பதற்காகவே பல பிள்ளைகள் தண்ணியைக் குடிச்சுப்போட்டு பள்ளிக்கூடம் வருகுதுகள். பெற்றோரும் ஒரு துண்டு பாண்கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் பிள்ளைகளுக்கு சாட்டுப்போக்கைச்சொல்லி பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்குதுகள். இப்படி காலைச் சாப்பாட்டு நேரத்தைக் கடக்கிறதுக்குள் நெஞ்சை உருக்கும் பல காட்சிகள் நடந்தேறி விடும். இத்தனை துன்பங்களையும் கடந்து படிக்க வேண்டும் என்று வரும் பிள்ளைகளுக்கு அவர்களின்ர சிந்தனை ஆற்றலை வளர்க்ககூடியதாக அரசு



கொண்டு வந்திருக்கும் போஷாக்கு உணவுத் திட்டத்தை கல்விமான்களாகிய நீங்கள் வழங்கினால் தான் என்ன? எந்த மொழியிலும் இல்லா நல்லதொரு பழமொழி எங்களிடம் இருக்கு. 'ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானா வளரும்'.

எங்கட இன்றைய சோம்பேறித்தனமும் அசட்டையீனமும் எதிர்ப்பு மனப்பான்மையும் நாளைக்கு எம்மத்தியில் ஓர் ஆரோக்கியமற்ற சமூகத்தை உருவாக்கி விடப் போகிறது பாருங்கோ...

ஏழை மாணவர்கள் மட்டுமல்ல நல்ல வசதியான குடும்பத்து மாணவர்களும் போஷாக்கான காலைச் சாப்பாட்டை சாப்பிடுவதில்லைப் பாருங்கோ...

காலையில வேலைக்குப் போகும் தாய்மார் பிள்ளைகளுக்கு பாணையும் ஜேமையும்தான் காலைச் சாப்பாடாய் கொடுக்கினம். இதில எங்க இருக்கு போஷாக்கு? கடுகதியான இந்த வாழ்க்கை ஓட்டத்தில் குந்தியிருந்து நல்ல சாப்பாடுகளை சமைச்சுக் கொடுக்க அம்மாமாருக்கு நேரமில்ல. காலைச் சாப்பாட்டில இப்ப யாருமே அக்கறை காட்டுவதில்லை. இதனால பாதிக்கப்படுவது வளரும் பிள்ளைகள்தான் பாருங்கோ...

எனவே, அதிபர்மாரே படிச்ச சமுதாயத்தை உருவாக்குவதில் நீங்கள் காட்டும் அக்கறையை நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதிலும் காட்டுங்கோ... சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் பாருங்கோ...

## கந்தனின் காட்சி கலக்கம் போக்கும்!

நல்லூர்க் கந்தன் கோவிலிற் சென்று
நாளும் அவனடி நாடித் தொழுதால்
எல்லோர் வினையும் அவனருளாலே
எளிதாய் இலாது விலகிப்போகும்
வல்லான் அவன்கை வடிவேல் அதற்கே
வல்லமை உண்டு வாழ்வை உயர்த்திட
பொல்லாப்பெல்லாம் விலகிப்போக
புத்தொளி பரப்பும் வேல்தன் ஒளிக்கதிர்

வீதியில் விழுந்து வணங்கித் துதித்தால்
விரும்பும் பேறுகள் விதமாய்க்கிட்டும்
ஓதிப் பண்ணொடு பாடல் இசைத்தால்
உள்ளொளி பரப்பி உவகை சேர்க்கும்
காதில் மணிஒலி கனிவொடு கேட்டால்
கந்தனின் காட்சி கலக்கம் போக்கும்
வேதியர் ஓதும் மந்திர அதிர்வால்
விதிர்ப்பு எய்தி மெய்யது சிலிர்க்கும்

நயினைக்கவிஞர்
நாகசண்முகநாதபிள்ளை

GET.WELL PHARMA
Pharmacy, Devices & Grocery
சகலவிதமான மருந்துகளும்
பாமா வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.
No.886, K.K.S. Road,
Vannarpannai,
Jaffna.
Tel : 021 222 8851
Mob : 0776 647464




# ஆண்களுக்கான கரம் சுற்றுப் போட்டியில் வென்றது வண்ணை காமாட்சியம்பாள் அணி

உடுவில்,

யாழ்ப்பாணம், பல்கலைக்கழக விளையாட்டு அவையும் யாழ். பல்கலைக்கழக கரம் அணியும் இணைந்து நடத்திய ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டியில் வண்ணை காமாட்சியம்பாள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் வண்ணை காமாட்சியம்பாள் சனசமூக நிலைய அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுகளைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுகளில் காமாட்சியம்பாள் சனசமூக விளையாட்டுக்கழக அணி 02:01 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதல் ஒற்றையர் சுற்றில் காமாட்சியம்பாள் சனசமூக நிலைய அணியைச் சேர்ந்த எஸ்.குமரேசனும் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிரவின்சனும் மோதிக்கொண்டனர். ஆறு சுற்றுகள் வரை நீடித்த இந்தப் போட்டியில் கும ரேசன் 25:05 புள்ளிகள் என்ற அடிப்படை யில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் சுற்றில் காமாட்சியம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எம்.சோபாநாத்தும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் வி.துஷிகரனும் மோதிக் கொண்டார்கள். எட்டு சுற்றுகள் வரை நீடித்த இந்தப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் துஷிகரன் 18:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெ.ஜெயகாந்தனும் சென். ஜோ ன்ஸ் கல்லூரி அணியின் ஆர்.டீன். ஒஸ்வேர்ட்டும் மோதிக் கொண்டார்கள். எட்டுச் சுற்றுக்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழக போட்டியாளர் ஜெயகாந்தன் 25:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

நான்காவது இரட்டையர் சுற்றில் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.குணதாஸ் ரிகாந்தனும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஆர்.டீன். ஜெனிபேர்ட், ஆர்.லோகதீஸ்வரனும் மோதிக்கொண்டார்கள். எட்டு சுற்றுகள் வரை நீடித்த இந்தப் போட்டியில் காமாட்சியம்பாள் விளையாட்டுக்கழகம் 19:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற து.

ஆட்ட நிறைவில் காமாட்சியம்பாள் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 03 :01 செற்கணக்கில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வென்று சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது.

## மானிப்பாய் இந்து வீரர்கள் கௌரவிப்பு

தெல்லிப்பழை,

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவில் விளையாட்டுத் துறைக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன. இவ் விளையட்டுத் துறைக்கான பரிசில்களை பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த துடுப்பாட்ட வீரனுக்குரிய விருதினை ஆர். டில்சானும், சிறந்த பத்துவீச்சாளருக்குரிய விருதினை சபேசனும், சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதினை பி.நிக்சனம், சகல துறை ஆட்டக்காரனுக்கான விருதினை எஸ்.நிறோசனும் பெற்றுக்கொண்டனர்.

பூப்பந்தாட்ட வீரனுக்கான விருதினை எஸ்.சன்ஜீவன் பெற்றுக்கொண்டார். சிறந்த உதைபந்தாட்ட வீரனுக்கான வர்ணவிருதினை ரி.ஜெனவிந்தனும் சிறப்பு ஹொக்கி வீரனுக்கான விருதினை கே. குற்றாலீசனும், சிறந்த தடகள வீரனுக்கான விருதினை கே.நிசாந்தனும் பெற்றுக்கொண்டனர்.

## குண்டெறிதலில் சாதனை

தெல்லிப்பழை.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தடகளப்போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி சர்மிளா 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவினருக்கான குண்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தினைப்பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் இவர் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழா நாளை ஆரம்பம்

நெல்லியடி,

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வும் யாழ்.மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியும் நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழக மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் நவநீதமணி, மாலுசந்தி ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.ஸ்ரீசண்முகதேவ், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் எஸ்.செல்வராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி. காங்கரா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் பி.சந்திரபாகு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து இளவாலை சென்லூட்ஸ் அணியும் இரண்டாவது போட்டியில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து கம்பர் மலை ஜங்கம்சன்ஸ் அணியும் மோதவுள்ளன.

## யாழ்ப்பாணம் சென்ரல் நடத்தும் முக்கோணத்தொடர் ஆரம்பம்



உடுவில்,

யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது ஆண்டாக நடத்தும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட முக்கோண கிரிக்கெட் போட்டி யில் இம்முறை கடந்த கால போட்டி களின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் மோதவு ள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி, யாழ்ப்பாணம் ஜொலி ஸ்டார் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி என்பன இந்த முக்கோணப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது போட்டி நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. முதல் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

17 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டியில்

## யாழ்.மத்தியை நான்கு விக்கெட்டுகளால் வென்றது தெல்லிப்பழை மகாஜனா

தெல்லிப்பழை,

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 17 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி ஒன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நான்கு விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்குமிடையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 34 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் மத்திய கல்லூரி அணி சார்பாக நிசாந்த் 12 ஓட்டங்களையும் யுதி பிசன்னா 11 ஓட்டங்களையும் தனுசன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். அணிக்கு உதிரிகளாக 30 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்து வீச்சில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பந்து வீச்சாளர்கள் சரண்ராஜ் 3 விக்கெட்டுக்களையும் சுகிர்ராஜ் 2 விக்கெட்டுகளையும் பிரகாஷ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 21 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று நான்கு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சார்பாக புருசோத் 28 ஓட்டங்களையும் சரண்ராஜ் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் அருசாந்த், கௌதமன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகம் ஸ்கந்தாவை தோற்கடித்து சென்.ஜோன்ஸ் அணி அபார வெற்றி

தெல்லிப்பழை,

இலங்கை பாடசாலைகள் துடுப்பா ட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 17வயதுப்பிரிவு அணியினருக்கான துடுப்பாட்டப் போட்டி ஒன்றில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 247 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இதற்கமைய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி யினர் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 380 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் கபில்ராஜ் 61 ஓட்டங்களையும் துவாரகசீலன் 82 ஓட்டங்களையும் அனோஜன் 99 ஓட்டங்களையும் மிதர்சன் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதாயக் கல்லூரியின் பந்து வீச்சாளர்களான சுஜிதரன், துவாரகன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

381 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியினர் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அபாரமான பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது 43.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டனர். துடுப்பாட்டத்தில் மயூரதன் 10 ஓட்டங்களையும் மதுஷன் 15 ஓட்டங்களையும் பிரதீப் சங்கர் 13 ஓட்டங்களையும் ரசிகரன் 14 ஓட்டங்களையும் சுஜிதரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக மிதர்சன் சிறப்பாகப் பந்து வீசி 6 விக்கெட்டுக்களையும் லோகதீஸ்வரர் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை 247 ஓட்டங்களால் அபாரமாக வெற்றி கொண்டது.

## நண்பர்கள் கிண்ணத்தை சுவீகரித்தது நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி

தெல்லிப்பழை,

பூநகரி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

பூநகரி நண்பர்கள் விளையாட்டுக்கழகம் கழகத்தின் ஸ்தாபகர் விஜிதன் ஞாபகார்த்தமாகவும் கழகத்தின் வளர்ச்சிக்காக செயற்பட்ட ரஜினிகாந்த், குகதாசன், மணிவண்ணன், ரதீபன் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவும் வெற்றிக்கிண்ணப் போட்டி ஒன்றை நடத்தினர். இதில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றின.

பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியும் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணியும் மோதிக்கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி 06 :00 என்ற கோல் கணக்கில் அபாரமாக வெற்றி பெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் தொடர் சிறப்பாட்ட வீரராக இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணி வீரர் கொலின்ஸும் சிறந்த கோல் காப்பாளராக இரணைமாதா நகர் அணியைச் சேர்ந்த ஜோன்மேரி மைக்கலும் தெரிவு செய்யப்பட்டனர். இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் 18 அணிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## விசேட தேவையுடைய மாணவர் விளையாட்டுப்போட்டிகள் நாளை

வட மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அலகும் மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்தும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் நாளை சனிக்கிழமை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி, சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இம் மாணவர்களுக்கான நிகழ்வுகளாக 80 போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




YARL OSAI யாழ் ஓசை

### வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday July 27, 2012